பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 21 திங்கட்கிழமை 04.04.2022 கதிர் 150

**இனி இது ரகசியம் அல்ல!**

கொழும்பு அரசியல் கடந்த சில தினங்களாகப் படு சூடாக இருக்கிறது என்பது என்னவோ வாஸ்தவம்தான். ஆனால் நேற்று மாலை அது கொதி நிலையை அடைந்தது.

"இலங்கையின் சமகால அரசியல் வரலாற்றில்

☞2

# அமைச்சர்கள் சகலரும் கூண்டோடு ராஜினாமா!

## பிரதமர் பதவியில் தொடர்வார் புதிய நியமனம் ஜனாதிபதியிடம்



கொழும்பு, ஏப்ரல் 04

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தவிர்ந்த ஏனைய அமைச்சர்கள் அனைவரும் கூண்டோடு பதவி விலகும் முடிவை நேற்றிரவு எடுத்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் அமையவிருக்கும் புதிய அமைச்சரவையின் அங்கத்தவர்கள் யார், யார், அவர்களுக்கு ஒதுக்கப்படும் அமைச்சுகள் எவை, எவை என்பவற்றை பிரதமரும் ஜனாதிபதியும் கூடிக் கலந்தாலோசித்து முடிவு செய்வர் எனக் கூறப்பட்டது.

☞2

## வழமைக்குத் திரும்பின சமூக வலைத்தளங்கள்!

இலங்கையில் முடக்கப்பட்டுள்ள சகல சமூக வலைத்தளங்களும் நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்று தொழில்நுட்ப அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் பாதுகாப்பு அமைச்சின் கோரிக்கைக்கமைய சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டிருந்தமை

☞2

## காட்டுமிராண்டித்தனமான அரசை வேரோடு பிடுங்கி வீச வேண்டும்!

### கொழும்பு போராட்டத்தில் சஜித் சூளுரை



ராஜபக்ஷ அரசு நாட்டுக்கு ஒரு கெடுவினையாகும். காட்டுமிராண்டித்தனமான இந்த அரசை மக்களின் ஆணையுடன் வேரோடு பிடுங்கி வீச வேண்டும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசுக்கு எதிராகச்

☞11

## இடைக்கால அரசு அமைக்க கோட்டா, மஹிந்த இணக்கம்

### இருவருடனான சந்திப்பின் பின்னர் விமல் தகவல்



நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் இடைக்கால அரசொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

☞2

### மின்வெட்டை நிறுத்தக் கோரி

## கோட்டா வீட்டுக்கு முன்பாக ஆண் ஒருவர் தற்கொலை!

நுகேகொடை – மிரிஹான வில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டுக்கு முன்பாக 53 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

நாட்டில் தினமும் மேற்கொள்ளப்படும் மின்வெட்டை உடனடியாக நிறுத்துமாறு கோரி

☞2

## கிளிநொச்சி வளாக மாணவர்களும் ஆர்ப்பாட்டம்

அரசுக்கு எதிராக யாழ்.பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அறிவியல் நகரில் ஏ – 09 வீதியில் பல்கலைக்கழக பிரதான பிரதான வீதியில்

☞2

## முன்னணி அலுவலகத்துக்கு முன்னால் பொலிஸ் குவிப்பு

### கஜேந்திரன் எம்.பி. வாக்குவாதம்



(இ.கலையமுதன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். கொக்குவில் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுப் பொலிஸார் குவிக்கப்பட்டமையால் குழப்பமான நிலை ஏற்பட்டது.

சமகால

☞11

## கோட்டா தலைமையிலான அரசுக்கு எதிராக வெளிநாடுகளில் திரண்ட இலங்கையர்கள்!



வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் அதிகளவான மக்கள் கலந்துகொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் மற்றும் அரசையும் பதவி விலகுமாறு வலியுறுத்தினர்.

ஆஸ்திரேலியா, பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மனி, நியூசிலாந்து, கனடா, ஜப்பான், சிங்கப்பூர்

☞2

eDUS Online School

சிறந்த Online கல்விக்கான நிரந்தர தீர்வு..!!

English & Tamil Medium

அனைத்து பாடங்களுக்குமான ஒன்லைன் வகுப்புகள் எம்மிடமிருந்து.



Enroll Now

தரம் 1 - 5 (Primary) தரம் 6 - 11 (Secondary) G.C.E A/L

Admissions

www.edus.lk

0777 123 330

அனைத்து பெற்றோர் மாணவரினதும் நம்பிக்கைக்குரிய ஒன்லைன் கல்விச்சேவை..!

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள இன்றைய தினம் மிகமிக வரலாற்று திருநாளாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" – என்று நேற்று என் பத்தியை முடித்திருந்தேன்.

மாறி மாறி அரசியல் அதிரடித் திருப்பங்கள் நிறைந்த செய்திகள் வெளியானபடி நேற்றைய பொழுது கரைந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவியை ராஜினாமாச் செய்தார் என்ற செய்தி உறுதிப்படுத்தப்பட்ட தகவல் போல நேற்று மாலை முதல் ஊடகங்கள் அனைத்திலும் பரவியது. அடுத்த பிரதமர் யார் என்று பலரும் ஹேஸ்யம் கூறும் நிலைமைக்குப் பேச்சுக்கள் அடிபட்டன.

ஆனால்இந்தச் செய்திகள் எல்லாம் பொத்தென்று அடிபட்டுப் போவது போல, பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்தார் என்ற செய்திக்கு மறுப்பு செய்தி வந்தது. பிரதமரின் ஊடக இணைப்பாளர் ரொஹான் வெலிவிட்ட அந்த மறுப்பை அனுப்பியிருந்தார்.

"பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியுள்ளார் என்ற செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. அடிப்படையற்றவை. அப்படியான திட்டம் ஒன்றும் இல்லை" – என்ற சாரப்பட அந்த மறுப்பு இருந்தது.

அந்த மறுப்பு, பாதி உண்மை; பாதி தவறு. நெருப்பில்லாமல் புகை வரவில்லை.

பிரதமர் இன்னும் ராஜினாமா செய்யவில்லை என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் பிரதமரின் கீழான அமைச்சரவையின் முழு மாற்றத்திற்கான திட்டம் இருந்தது என்பதுதான் உண்மை நிலைவரம்.

கடந்த சில நாள்களாக நாட்டில் ஜனாதிபதிக்கும் அவரின் அரசுக்கும் எதிராக இடம்பெற்றுவரும் மக்கள் எதிர்ப்பு போராட்டங்கள் உச்சக்கட்டத்தை எட்டி இருக்கின்றன. அவற்றை எதிர்கொண்டு சமாளிக்க வழியற்ற – வகையற்ற – ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவசரகால நிலையைப்பிரகடனப்படுத்தி, ஊரடங்கை அறிவித்து, நாட்டின் பதற்ற நிலையை இன்னும் தீவிரப்படுத்தி இருக்கின்றார்.

இதற்கிடையில் –

ஆளும் தரப்பில் அதிருப்திக் குழுவாக இயங்கும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உட்பட 11 கட்சி குழுவினர் ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்து பேசினர்.

புதிய பிரதமர் ஒருவர் தலைமையில் காபந்து அரசு ஒன்றை – அல்லது இடைக்கால அரசு ஒன்றை – நிறுவும்படி தாங்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன் வைத்தனர் என்றும் –

அதற்கு அரசுத் தரப்பு சாதகமாகப் பதிலளிக்கும் நிலைமை காணப்படுகின்றது என்றும் –

விமல் தரப்பிலிருந்து தகவல் வெளியிடப்பட்டது.

இதேசமயம் சகல தரப்புகளையும் உள்ளடக்கிய புதிய காபந்து அரசு ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் அடுத்த ஒரு வார காலத்தில் தமது 14 எம்.பிக்களும் அரசுக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறித் தனிக் குழுவாக இயங்குவர் என்று கால வரையறையுடன் நிபந்தனை அறிவிப்பு கொடுத்தது சிறிலங்கா சுதந்திரக் கட்சி.

அதேவேளை, அப்படி ஒரு காபந்து அரசு அமைக்கப்பட்டால் அதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முக்கிய இரண்டு அமைச்சர்கள் பொறுப்பை ஏற்குமா என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை கூட்டமைப்பு வட்டாரங்களைத் தொடர்பு கொண்டு கேட்டறிய முயன்றார்.

எனினும், கூட்டமைப்பு வட்டாரங்கள் அவருக்கு சாதகமான பதில் தெரிவிக்கவில்லை. ஆயினும் முகத்தில் அடித்தால் போல இல்லை என்றும் கூறப்படவில்லை. பிறகு பேசலாம் என்று விடயம் தள்ளிப்போடப்பட்டதாக அறிந்தேன்.

பிரபல ஊடகத் தலைவர் ஒருவரின் இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், ரணில் விக்கிரமசிங்கவும் சந்தித்து பேசிய பின்னர் நேற்று காலை ரணில் கூட்டமைப்புடன் தொடர்பு கொண்டு கூட்டமைப்புப் பக்கத்து நிலைப்பாட்டைத் தட்டிப் பார்த்து இருக்கின்றார்.

இந்தப் பின்புலத்தில்தான் நேற்று மாலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ராஜினாமாச் செய்து விட்டார் என்ற தகவல் பரவியது. அது தொடர்பில் சில வட்டாரங்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்பு கொண்டு வினவின.

"ஆம். அப்படி ஒரு நிலைமை உண்டு. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ராஜினாமாச் செய்ய வேண்டும் என்பதுதான் அரசுக்குள் இருக்கும் அதிருப்தி அணியின் பிரதான கோரிக்கை. பஸில் தாமாகப் பதவியைராஜினாமாச்செய்யமறுத்துள்ளார். ஜனாதிபதியும் தாமாக அவரைப் பதவி விலக்க விரும்புகின்றார் இல்லை. இந்தப் பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பதற்கு பிரதமர் பதவி விலகுவதுதான் ஒரே வழி என ஒரு தரப்பில் கூறப்பட்டது. அவர் தமது பதவியை ராஜினாமா செய்தால் முழு அமைச்சரவையுமே பதவி இழந்துவிடும் – நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உட்பட. பின்னர், மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவி ஏற்கலாம். அமைச்சரவையிலும் புதிய மாற்றங்களைத் தம் இஷ்டப்படி ஜனாதிபதி செய்யலாம். குழப்பம் பண்ணிக் கொண்டிருக்கும் சு.கவின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, செயலாளர் தயாசிறி ஜயசேகர போன்றோருக்கும் கூட புதிய அமைச்சரவையில் இடம்கொடுக்கப்படக்கூடும். சில சமயங்களில் பிரதமருக்குப் பதிலாக முழு அமைச்சர்களும் சேர்ந்து ராஜினாமாச் செய்யக் கூடும்" – என்று ரணில் நேற்று மாலை கோடி காட்டினார்என அறிந்தேன்.

அத்தகைய காபந்து அரசில் வெளிவிவகார அமைச்சு ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்படலாம் என்று அடிபடும் பேச்சை அடியோடு மறுத்தார் ரணில்.

இதற்கிடையில் –

அத்தகைய காபந்து அரசில் இணைவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் இருக்கும் சம்பிக்க ரணவக்கவுக்கும் சில இளம் எம்.பிக்களுக்கும் நப்பாசை. இருந்த போதிலும் அந்த விருப்பத்துக்கு ஒரேடியாகத் தாழ்ப்பாள் போட்டு மூடி விட்டார் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸா.

நேற்றைய கொழும்பு ஆர்ப்பாட்டத்தில் அவர் திட்டவட்டமான அறிவிப்பு ஒன்றை விடுத்தார். "கோட்டாபய அரசு மக்கள் ஆணையை இழந்து விட்டது. அதனால் அந்த அரசு பதவியில் தொடர முடியாது. அதேநேரம் மக்களின் வாக்களிப்பு மூலம் ஆணை பெறாது நாங்களும் பதவிப் பொறுப்பு எதனையும் ஏற்க மாட்டோம்" – என்று அறிவித்து விட்டார் அவர்.

அதே போன்ற நிலைப்பாட்டில்தான் ஜே.வி.பியும் உள்ளது.

ஆக, ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி., தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போன்ற பிரதான எதிர்க்கட்சிகள் இடம்பெறாமல் இடைக்கால அரசோ, தேசிய அரசோ, காபந்து அரசோ ஏதும் வெற்றிகரமாக முன் நகர்வதற்கு சாத்தியமே இல்லை.

நேற்று இரவு இந்தப் பத்தி எழுதப்பட்டு கொண்டிருந்தபோது ஜனாதிபதியையும் பிரதமரையும் முக்கிய அமைச்சர்கள் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

அதனை அடுத்து பிரதமர் தவிர்ந்த ஏனைய அமைச்சர்கள் அனைவரும் கூண்டோடு பதவி விலகும் முடிவு எடுக்கப்பட்டது.

இப்போது ஜனாதிபதியையும், பிரதமரையும் கொண்ட அமைச்சரவை மட்டும் நடைமுறையில் உள்ளது.

இனி யார்,யார் புதிய அமைச்சரவையில் சேர்க்கப்படுவார்கள் என்ற அக்கப்போர் இன்று காலையில் ஆரம்பித்து விடும்.

தென்னையில் தேள் கொட்ட பனையில் நெறி கட்டிய மாதிரி, கொழும்பில் அமைச்சரவைக்கான அக்கப்போர் ஆரம்பிக்க, அதன் பிரதிபலிப்பு நம் கூட்டமைப்பில் எதிரொலித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை...!

– மின்னல் –

## அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளை அரசுத் தலைமை எதிர்கொண்டு சமாளிப்பதற்கு வசதியாக, அமைச்சரவை மாற்றம் ஒன்றுக்கு வழி செய்யும் விதத்தில் இந்த முடிவை அமைச்சர்கள் நேற்று கூடிய அமைச்சரவையில் எடுத்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில், நேற்றிரவு சுமார் 3 மணி நேரம் கூடி ஆராய்ந்த பின்னர் அமைச்சர்கள் நேற்று நள்ளிரவு இந்த முடிவுக்கு வந்தனர்.

அமைச்சரவை மாற்றத்திற்கு வசதியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது பதவியை ராஜினாமா செய்வார் என்றும், அவர் பதவியை ராஜினாமா செய்தால் முழு அமைச்சரவையும் பதவி விலகியதாக அர்த்தமாகும் என்றும் முதலில் சுட்டிக்காட்டப்பட்டது. அந்த அடிப்படையில் நேற்று மாலையில் இருந்து செய்திகளும் வெளியாகின.

ஆனால் பிரதமர் தமது பதவியை ராஜினாமா செய்யக் கூடாது, புதிய அமைச்சரவையிலும் அவரே பிரதமராக நீடிக்க வேண்டும் என்று நேற்றைய அமைச்சரவையில் ஏக குரலில் வலியுறுத்தப்பட்டதாகத் தெரிகின்றது.

எனவே, பிரதமர் பதவியில் தொடர ஏனைய அமைச்சர்களை ஜனாதிபதி மாற்றி அமைக்க வசதியாக, அனைத்து அமைச்சர்களும் பதவியை ராஜினாமாச் செய்வர் என்று நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது. அதனை அடுத்து பிரதமர் தவிர முழு அமைச்சர்களும் தத்தமது பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

அதனால் இது முழு அமைச்சரவை கலைப்போ, புதிய அமைச்சரவை நியமனமோ அல்ல, அமைச்சர்கள் மறுசீரமைப்பே இனி நடைபெறப் போகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

அடுத்து வரும் தினங்களில் புதிய அமைச்சரவை பதவி ஏற்கக் கூடும்.

பிற கட்சிகளுடன் கலந்துரையாடி, புதிய அமைச்சரவையை ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து தீர்மானிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி அமைச்சர்களின் இராஜிநாமாக் கடிதங்களுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று சந்தித்துப் பேச்சு நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார். இந்தச் சந்திப்பில் பதவி விலகத் தீர்மானித்துள்ள அமைச்சர்களும் பங்கேற்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களின் இராஜிநாமாக் கடிதங்களை ஜனாதிபதி ஏற்ற பின்னர் புதிய அமைச்சரவை தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும். அந்த அமைச்சரவை இடைக்கால சர்வகட்சி அரசாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இடைக்கால அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

11 கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றது. இந்நிலையில், நேற்றுப் பிரதமரை மேற்படி தரப்பினர் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தச் சந்திப்பின் பின்னரே விமல் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

## வழமைக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
குறிப்பிடத்தக்கது

இதேவேளை, சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டதைத் தாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்றுக் காலை தெரிவித்திருந்தார்.

தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டு அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

இதில், சமூக வலைத்தளங்களைத் தடுப்பது போன்ற நடவடிக்கைகள் பயனற்ற செயல் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

தானும் தற்போது VPN வழிமுறையைப் பயன்படுத்தி சமூக வலையமைப்புகளைப் பயன்படுத்துகின்றார் என்றும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்திருந்தார்.

எனவே, மேலும் நெருக்கடிகளை உருவாக்காமல், பிரச்சினைகளுக்கான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ருவிட்டர் பதிவின் மூலம் கோரியிருந்தார்.

## கிளிநொச்சி வளாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள ஜனாதிபதி தலைமையிலான அரசு வீடு செல்லவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்திக் கோஷம் எழுப்பினர்.

## கோட்டா தலைமையிலா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
உள்ளிட்ட நாடுகளில் இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதில் கலந்துகொண்ட மக்கள், கோட்டா வீட்டுக்கு போ என்ற கோஷத்தையும் எழுப்பினர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், இலங்கை மக்கள் அரசுக்கு எதிராகச் சுயமாகத் திரண்டு போராட்டங்களை நடத்த ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை மக்களின் இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவாக வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

## கோட்டா வீட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
குறித்த நபர் மின்மாற்றியில் ஏறினார் எனவும், இதன்போது மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## உன்னிப்பாக கவனிப்பு

**இலங்கையின் அரசுக்கு – ஆட்சிப் பீடத்துக்கு – எதிராகக் கிளர்ந்துள்ள மக்களின் எழுச்சியை இரும்புக் கரம் கொண்டு அடக்குவதற்கு கோட்டாபய ராஜபக்ஷ அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் சர்வதேசத்தின் உன்னிப்பான கவனத்துக்கு உட்பட்டிருக்கின்றன.**

**இலங்கையில் பிறப்பிக்கப்பட்ட அவசரகால நிலை அறிவிப்பு, தொடர்ந்த 36 மணி நேர ஊரடங்கு உத்தரவு, சமூக ஊடகங்கள், வலையமைப்புகளின் முடக்கம், அமைதியாக எதிர்ப்பை வெளிப்படுத்த முயன்ற பொது மக்களுக்கு எதிராகப் பலப் பிரயோகம், ஊடகவியலாளர் கள் உட்படப் பலர் தாக்கப்பட்டமை போன்ற அனைத்து விடயங்களும் சர்வதேச தரப்புகளினால் மிக நுணுக்கமாகக் கவனிக்கப்பட்டிருக்கின்றன.**

**“இலங்கையின் நிலைமையை மிக உன்னிப்பாக அவதானிக்கிறோம். மிகுந்த எச்சரிக்கையுடன் கவனிக்கிறோம்.” – என்று சர்வதேச உறவுகளுக்கான அமெரிக்க செனட் குழு தெரிவித்துள்ளது.**

**அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டமை குறித்து கவலை வெளியிட்ட ஐரோப்பிய ஒன்றியம், நாட்டின் அனைத்து மக்களினதும் சுதந்திரமாக ஒன்று கூடுதல் மற்றும் அமைதி வழியில் எதிர்ப்பைத் தெரிவித்தல் ஆகியவை உட்பட்ட அனைத்து ஜனநாயக உரிமைகளையும் பாதுகாத்துப் பேணுமாறு இலங்கை அதிகாரிகளைக் கடுமையாக வலியுறுத்தியுள்ளது. இது இலங்கை மக்களுக்கு மிகச் சவாலான காலம் என்று குறிப்பிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியமும் நிலைமையைத் தான் உன்னிப்பாக அவதானிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.**

**ஊடகவியலாளர்கள் மற்றும் அரச எதிர்ப்பாளர்கள் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் குறித்து வெளியாகியுள்ள தகவல்கள் பற்றியும் சிரத்தையும் கவலையும் வெளியிட்டுள்ள பிரட்டிஷ் தூதுவர் சாரா ஹுல்டன், அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் சிவிலியன்களின் உரிமை ஜனநாயகத்தின் இன்றியமையாத ஒரு பகுதி என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.**

**“இலங்கை மக்கள் தங்கள் எதிர்ப்புணர்வை அமைதி வழியில் வெளிப்படுத்த சகல உரிமைகளும் கொண்டவர்கள், அது ஜனநாயக முறைமைகளில் கருத்தை வெளிப்படுத்தும் முக்கியமான ஒரு முறைமையாகும். இலங்கை விடயத்தை நான் மிக நெருங்கிக் கவனிக்கிறேன். வரவிருக்கும் நாள்கள் அனைத்துத் தரப்புகளில் இருந்தும் கட்டுப்பாட்டுப் பொறுப்பைக் கொண்டு வரும் என நம்புகிறேன். அத்துடன் இப்போது மிக அவசரமாக, அவசியமாகத் தேவைப்படும் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் என்பன கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்.” – என்று இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் ஜுலி சுங் தெரிவித்திருக்கின்றார்.**

**இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்று வரும் சம்பவங்கள் குறித்து மிகக் கவனமாக அவதானித்து வருகின்றோம் என்று ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் ஹம்டி தெரிவித்தார்.**

**இலங்கையில் இடம்பெறும் ஒவ்வொரு நகர்வும் – இராஜதந்திர ஊடாட்டமும் – மேற்குலகில் இருந்து பல கண்களினால் மிக உன்னிப்பாக – துல்லியமாக – மிக அவதானமாக – நோக்கப்படுகின்றன என்பது உண்மை.**

**மக்கள் கூட்டங்களைக் கையாள்வதில் கோட்டாபய அரசு மிகப் பொறுப்பாக – மிக அவதானமாக – மிகக் கவனமாக – இருப்பதன் பின்னணியும் இதுதான்.**

## அரசாங்கத்துக்கான உற்சாகமூட்டல்களே போராட்டங்கள் வைராக்கியத்துடன் எதிர்கொள்வோம் என்கிறார் டக்ளஸ்



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களை மனவைராக்கியத்துடன் எதிர்கொள்வதற்கான உற்சாகமூட்டல்களாகவே எதிர்த்தரப்பினரால் தூண்டி விடப்பட்டுள்ள போராட்டங்கள் அமைந்துள்ளன என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்வரும் சில வாரங்களுக்குள் நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் சகஜ நிலைக்குத் திரும்பும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன.

நீண்ட பல வருடங்களாக எமது நாடு எதிர்கொண்ட பொருளாதார சவால்களின் திரட்சியே இப்போது விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது.

கடந்த காலங்களில் பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு அவற்றில் வெற்றி பெற்ற எமது அரசு, தற்போதைய பொருளாதார சவால்களையும் முறியடிப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இவ்வாறான நிலையில், மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களை தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் எதிரணிகள், மக்கள் மத்தியில் தவறான பிரசாரங்களை மேற்கொள்வதுடன் போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றன.

இவ்வாறான போராட்டங்கள் விளையாட்டுக் கழகங்களின் வீரர்கள் சவால்களை எதிர்கொள்ளுகின்ற போது, ரசிகர்களால் வழங்கப்படுகின்ற உற்சாகமூட்டல்கள் போன்றே அமைந்துள்ளன.

ரசிகர்களின் உற்சாகமூட்டல்கள், விளையாட்டு வீரர்களுக்கு வெற்றியடைய வேண்டும் என்ற வைராக்கியத்தையும் உந்துதலையும் ஏற்படுத்துவது போன்றே, எதிரணிகளால் மேற்கொள்ளப்படுகின்ற போராட்டங்கள் எமது அரசுக்கு உந்துதலாக அமைந்திருக்கின்றன.

எனவே, மக்கள் சகிப்புத் தன்மையுடனும் நம்பிக்கையுடனும் எதிர்வரும் சில நாள்களை எதிர்கொள்ள வேண்டும். – எனத் தெரிவித்துள்ளார்.

## 700 கோடி டொலர் கடனை செலுத்தத் தயாராகிறது அரசு!

### கம்மன்பில கூறுகிறார்



நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள நிலையில், 700 கோடி அமெரிக்க டொலர் கடனைத் திருப்பிச் செலுத்த அரசாங்கம் தயாராகி வருகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இந்தச் செயற்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

இந்த அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. நாட்டுமக்களின் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வை வழங்க முடியாத காரணத்தால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள விரக் தியே இன்று வன்முறையாக மாறியுள்ளது.

அரசாங்கத்தின் மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் மக்கள் நம்பும் அரசாங்கத்தைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். ஆனால், கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் நாட்டைத் தேர்தலுக்குத் தள்ள முடியாது என்பதால், நாட்டை குழியில் இருந்து மீட்க இடைக்கால அரசு உருவாக்கப்பட வேண்டும்.

கடந்த இரண்டு வருடங்களில் செய்ய வேண்டியதைச் செய்யாததன் விளைவுகளைத்தான் இப்போது அனுபவிக்கிறோம். ஆனால் அரசு இன்னும் செய்ய வேண்டியதைச் செய்யவில்லை.

உதாரணமாக இன்று மக்களுக்கு மின்சாரம் இல்லை, எரிபொருளில்லை, மருந்து இல்லை. ஆனால் கடந்த ஏழு நாள்களாகக் கடனைச் செலுத்திய அரசு நாங்கள் என்று அரசாங்கம் மிகவும் பெருமையுடன் கூறுகின்றது.

மக்களின் அடிப்படைத் தேவைகளை இலங்கை அரசு வழங்கத் தவறியமை நாட்டுக்குப் பாரிய ஆபத்தை ஏற்படுத்தியிருப்பதை இன்று முழு உலகமும் அறியும். எனவே, கடனைச் செலுத்த முடியாத நிலையில் இலங்கை இருப்பதை உலகமும் புரிந்து கொண்டுள்ளது. – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஏ.டி.எம். இடையூறுகள் குறித்து தனியார் வங்கிகள் எச்சரிக்கை!

நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடி காரணமாக ஏ.டி.எம். மற்றும் சி.டி.எம். இயந்திர சேவைகள் தற்காலிகமாகப் பாதிக்கப்படலாம் என்று பல தனியார் வங்கிகள் எச்சரித்துள்ளன. இது தொடர்பாக இலங்கையின் முன்னணி தனியார் வங்கிகள் தமது அறிவிப்புகளை வெளியிட்டுள்ளன.

ஏ.ரி.எம்., சி.ஆர்.எம்., சி.டி.எம். இயந்திரங்களில் சேவைத் தடங்கல்களை சந்திக்க நேரிடலாம் என்பதையும், மின்சார விநியோகத்தில் நிலவும் கட்டுப்பாடுகள் காரணமாக எங்கள் சில கிளைகள் மூடப்படலாம் எனவும் வங்கிகள் அறிவித்துள்ளன.

ஏ.டி.எம். மற்றும் சி.டி.எம். இயந்திரங்களுக்கான தற்காலிக மின்பிறப்பாக்கிகள் தொடர்ந்து செயற்படுவதை உறுதிசெய்ய டீசல் வழங்கப்பட வேண்டும் என்பதால், தற்போதைய மின் தடைகள் காரணமாக சவால்களை எதிர்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிப்புக் குறைவாக இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம், மேலும் எந்தவொரு சிக்கலையும் தவிர்க்க எங் கள் டிஜிற்றல் ஒன்லைன் சேவைகளைப் பயன்படுத்த வாடிக்கையாளர்களை வலியுறுத்துவதாகத் தனியார் வங்கிகள் குறிப்பிட்டுள்ளன.

சில மணிநேரங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக மின்பிறப்பாக்கிகள் வைக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். பெரும்பாலான இயந்திரங்களுக்கு மூன்று முதல் நான்கு மணிநேரம் மின்சாரம் வழங்க முடியும்.

எனினும், ஆறு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த மின்வெட்டு காரணமாக, மின் விநியோகம் மீண்டும் தொடங்கப்படுவதற்கு முன்பே பல மின்பிறப்பாக்கிகள் செயற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு இந்த அரசு எவ்வாறு நியாயம் வழங்கும்?

## முன்னாள் எம்.பி. ஸ்ரீநேசன் கேள்வி

யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளையே சந்திக்க விரும்பாத நிலையில் பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்டோர் இருக்கையில் அந்த உறவுகளுக்கு இவர்களால் நியாயம் எவ்வாறு பெற்றுக் கொடுக்கப்படும் என்று நம்ப முடியும்? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் கேள்வியெழுப்பியுள்ளார்.

மட்டு. ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம்மட்டுவிலில்காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் பொலிஸாரால் தாக்கப்பட்டமை மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விடயம். யாழிற்கு விஜயம் மேற்கொண்டு பிரதமரைச் சந்தித்து தங்கள் உறவுகளின் அவலத்தை எடுத்துக்காட்ட முற்பட்ட போது பொலிஸார் மிகவும் கெடுபிடியாக நடந்து கொண்டார்கள், தாக்கினார்கள் இது மிகவும் மன வேதனையான விடயம். இப்படியான நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு உள்நாட்டுப் பொறிமுறை மூலமாக ஒரு தீர்வு கிடைக்கும் என்று நாங்கள் நம்புகின்றமை மிகவும் அறிவீனமான ஒரு செயலாகத்தான் இருக்கும்.

அந்த உறவுகளையே சந்திக்க விரும்பாத ஜனாதிபதி, பிரதமர் இருக்கையில் அந்த உறவுகளுக்கு இவர்களால் நியாயம் பெற்றுக்கொடுக்க முடியும் என்று நாங்கள் நினைப்போமாக இருந்தால் எம்மைப் போன்று அறிவீனமானவர்கள் இருக்க முடியாது.

அந்த உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக சர்வதேச பொறிமுறை மூலம் தான் நீதி கிடைக்குமே தவிர உள்நாட்டுப் பொறிமுறை மூலமாக நீதி கிடைக்காது என்பது தான் நாங்கள் கடந்த காலங்களில கற்றுக்கொண்ட படிப்பினையாக அமைந்திருக்கின்றது.

இவ்வாறு பிரதமரைச் சந்திக்க விடாமல் தாக்கியமைக்கான எதிர்ப்பைத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவுகள் வெகுஜன ரீதியான போராட்டத்தைச் செய்வதற்காக விளைந்திருக்கின்றார்கள். நிச்சயாக அவர்கள் பட்ட அந்த அவஸ்தையை வெளிக்காட்டுவதென்பது மிக முக்கியமான விடயமாகும். அவ்வாறு அவர்கள் அந்த ஆர்ப்பாட்டத்தைச் செய்வதற்கான பொறுப்பு அவர்களிடம் இருக்கின்றது. அதற்கான ஆதரவினை ஒட்டுமொத்த தமிழர்களும் வழங்க வேண்டும். ஆனால், அதற்கும் அரசு முட்டுக்கட்டைகளைப் போடுகின்றது.

ஒரு ஜனநாயக நாட்டில் தங்களுக்கு ஏற்படும் அநீதிகளைச் சுட்டிக் காட்டுவதற்கு யாருக்கும் உரிமை இருக்கின்றது. அந்த உரிமையின் அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவுகளுக்கு ஏற்பட்ட அந்த அவலத்தை, அராஜகத்தை அவர்கள் ஆர்ப்பாட்டத்தின் மூலமாக வெளிப்படுத்துவதற்கு முனைந்திருக்கின்றார்கள். வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுகின்ற இந்த ஆட்சியாளர்களுக்கும், உலகத்திற்கும் செய்தியை அவர்கள் சொல்ல வேண்டும்.

இந்த ஆட்சியாளர்களால் எமது உறவுகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியாது. சர்வதேச பொறிமுறையின் மூலம் தான் நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியும். மனித உரிமைகள் ஆணையாளர் கூட இந்த உள்நாட்டுப் பொறிமுறையைப் பற்றி தெரிந்திருக்கின்றார். அதற்கேற்ற விதத்தில் எங்களது அரசியற் செயற்பாடுகளும் இருக்க வேண்டும்.

அண்மையில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாடியிருக்கின்றார். அந்த வேளையில் பல விடயங்கள் அங்கு சொல்லப்பட்டிருக்கின்றன.

13 அவது திருத்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமை என்பது ஆரம்பப் புள்ளியாக அமைத்துக்கொண்டு அதற்கு மேலே சென்று சமஷ்டிக் கட்டமைப்பு ரீதியான தீர்வு தான் தமிழர்கள் சுயமரியாதையோடு, சுயகௌரவத்தோடு சமத்துவமாக வாழ்வதற்கு உதவும் என்ற விடயம் சொல்லப்பட்டது. ஒற்றையாட்சி முறை என்பது சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு முறை.

இந்த ஆட்சி முறை கடந்த 74 ஆண்டுகளாகத் தோல்வியில் முடிந்த ஆட்சி முறையாக இருக்கின்றமையால். இந்த நாட்டில் மூவின மக்களும் சமத்துவமாக வாழ்வதாக இருந்தால் சமஷ்டி ஆட்சி முறையைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்தியா முனைய வேண்டும்.

இந்த 13 ஆவது திருத்தம் இருக்கும் போதே காணி அபகரிப்புகள் நடைபெற்றிருக்கின்றன, காணி பொலிஸ் அதிகாரங்கள் தரப்படவில்லை, வெளிநாடுகளில் இருந்து உதவிகளைப் பெறக் கூடிய நிதி அதிகாரங்கள் இல்லாமல் இருக்கின்றன. இந்த ஒற்றையாட்சி முறையால் சிங்கள மக்கள் கூட பயன் பெற்றுள்ளார்களா என்று பார்த்தால்



அதுவும் இல்லை.

தோல்வியடைந்த ஒற்றையாட்சி முறைமையைத் தொடர்ந்தும் தூக்கிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. யதார்த்தமாகச் சிந்தித்து இங்கு ஒரு சமஷ்டிக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு இந்திய வெளிவிகார அமைச்சர் உதவி செய்ய வேண்டும். இது தொடர்பில் இன்னும் இன்னும் இழுத்தடித்துக் கொண்டு போவதென்பது தமிழ் மக்கள் மத்தியில் மேலும் விரக்தியை ஏற்படுத்துகின்ற செயலாகவே அமையும்.

இந்தியாவின் தமிழ்நாடு என்பது இலங்கைத் தமிழ் மக்களின் தொப்புள்கொடி உறவாக அமைந்திருக்கின்றது. அந்த அடிப்படையில் சீனாவா இந்தியாவா வடக்கு – கிழக்கில் முதலீடுகளைச் செய்ய முடியும் என்ற கேள்வி எழுகின்ற போது தமிழர்களின் கலாசாரப் பின்னணியோடு, மொழி ரீதியான பின்னணியைக் கொண்டுள்ளதன் அடிப்படையில் இந்தியா முதலீடுகளைச் செய்வதற்குத் தமிழ் மக்கள் மத்தியில் எதிர்ப்பிருக்காது.

இந்தியாவும் முதலீடுகளைச் செய்வதோடு மட்டுமல்லாது தமிழ் மக்களின் வாழ்வாதாரம், சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான அபிவிருத்திளை அடைவதற்குரிய செயற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாது தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலைமையை விடுத்து புத்துணர்வுடன் தமிழ் மக்களுக்குரிய தீர்வையும் பெற்றுக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். – என்று தெரிவித்தார்.

## மல்வத்த, அஸ்கிரிய பீடங்கள் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

*அரசுக்கெதிரான மக்கள் போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.*

*அந்த வகையில், நாட்டு மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி மல்வத்தை மற்றும் அஸ்கிரிய அமரபுர ராமன்ன மகா நிகாய பீடாதிபதிகளால் கையொப்பமிடப்பட்ட விசேட கடிதமொன்று அரசுக்கும், அமைச்சர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.*

*மல்வத்து பீடத்தின் பொதுத் தலைவர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல, வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன அஸ்கிரி பீடத்தின் பொதுத் தலைவர் தொடம்பஹல ஸ்ரீ சந்திரசிறி அமரபுர, மகானா நிகாய மகா நாயக்கர் மகுலேவே ஸ்ரீ விமல ஸ்ரீ லங்கா ராமன்ன நிகாய மகாநாயக்க தேரர் ஆகியோர் கையொப்பமிட்டு இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.*

## மிரிஹான போராட்டக்காரரை அறிய அரசு விரைந்து செயற்பட்டதன் நோக்கம் என்ன?

### கத்தோலிக்க திருச்சபை கேள்வி

மிரிஹானவில் இடம்பெற்ற போராட்டங்களுக்கு அடிப்படைவாதிகளே காரணம் என்று ஜனாதிபதி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கை தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள இலங்கைத் திருச்சபை, மிகக் குறுகிய காலத்துக்குள் பொறுப்பாளர்கள் எனக் கூறப்படும் தரப்பினரை அடையாளம் காண அவசரப்படுவதன் உள்நோக்கம் என்ன எனக் கேள்வி எழுப்பியுள்ளது.

இந்தநிலையில் ஜனாதிபதியும் அரசும் இந்த நாட்டு மக்களின் கண்ணீருக்கு செவிசாய்த்து பொறுப் பான நிர்வாகமாகத் தமது அடிப்படைக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என இலங்கை திருச்சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொருளாதார மீட்சிக்கான குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகாலத் திட்டங்களை அவசர அவசரமாக வகுத்துத் தருவது அரசின் கடமையாகும் என்றும் திருச்சபை குறிப்பிட்டுள்ளது.

இனம், மதம், சாதி, சமூக வர்க்கம் அல்லது அரசியல் வேறுபாடின்றி இலங்கை மக்கள் தங்கள் உயிர்வாழ்விற்காகப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த தீவிரமான மற்றும் முன்னோடியில்லாத சூழ்நிலைகளுக்குப் பதிலளிக்க அரசு தவறிவிட்டது.

அத்துடன் மக்களை முற்றிலும் இருளில் வைத்துள்ளது. இப்போது பொறுமை இழந்து தவிக்கும் மக்கள் தொடர்ந்தும் கிளர்ந்தெழுந்து கோபத்துடன் செயற்படுவார்கள்.

இத்தகைய செயல்களை தீவிரவாத சக்திகள் மீது குற்றம் சாட்டுவது ஆபத்தான முயற்சியாகும்.

இந்த வகையான எதிர்ப்புகளை அடக்குவதற்குப் பதிலாக உரையாடல் மற்றும் ஈடுபாட்டின் பதில் தேவைப்படுகிறது.

மக்கள்தங்கள்கருத்துக்களைவெளிப்படுத்துவதைத் தடுப்பதற்காக நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவது தேசத்தின் எரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது.

இந்தநிலையில் பொலிஸ் மற்றும் ஆயுதப் படைகள் விவேகத்துடன் செயல்படுமாறு இலங்கை திருச்சபை கோரியுள்ளது.

மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்ட ஒரு சூழ்நிலைக்கு வெறுமனே பதிலளிப்பதால், அனைத்து பொறுப்புள்ள அரச அதிகாரிகளும் இந்த நேரத்தில் பொறுமையுடன் செயற்பட வேண்டும்.

பொது மக்களின் அழுகை செவிடான காதுகளில் விழாது. எனினும், எமது மக்களின் வலிகளை திறந்த கண்களால் பார்க்கமுடியும் என்றும் திருச்சபை தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# இராணுவ ஆட்சிக்குள் நாடு சென்று விடக்கூடாது என்பதற்கே இடைக்கால அரசைக் கோருகிறோம்!

## 11 பங்காளிக் கட்சிகள் வலியுறுத்துகின்றன என்கிறார் வாசு



அரசுக்கு எதிரான மக்களின் ஜனநாயகப் போராட்டம் இராணுவ ஆட்சிக்கு வித்திடக் கூடாது என்பதற்காகவே அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசை கோருகிறோம்.

மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்கும் நிலையில் அரசு இல்லை என்பது நடைமுறைத் தீர்மானங்கள் ஊடாக விளங்குகிறது என நீர்வழங்கல் துறைஅமைச்சர்வாசுதேவநாணயக்கார தெரிவித்தார்.

அரசில் அங்கம் வகிக்கும் 11 பங்காளி கட்சிகள் ‘கால்பந்து அரசு’ அமைப்பது தொடர்பாக ஜனாதிபதியிடம் முன்வைத் துள்ள கோரிக்கை தொடர்பில்வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடு பாரிய நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது. அரசுக்கு எதிரான மக்களின் போராட்டம் கடுமையாகக் கிளர்த்தெழுந்துள்ளது. எனது அரசியல் அனுபவத்தில் தற்போதைய நிலைமையை முன்னொருபோதும் காணவில்லை. அரச தலைவருக்கு எதிராக நாட்டு மக்கள் இதற்கு முன்னர் இவ்வாறு வீதிக் கிறங்கவுமில்லை.

பொருளாதார நெருக்கடியை அரசு வேண்டுமென்றே தீவிரப் படுத்தியுள்ளது. அரசு முக்கிய பதவியை வகிப்பவர்கள் அரசில் பலவீனப்படுத்தி, நாட்டு மக்களை வீதிக்கிறக்கி தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இருந்து கொண்டு செயற்பட்டதன் பெறுபேறு தற்போது மக்கள் போராட்டமாக வெளிப்படுகிறது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு எவ்வித தீர்மானங்களையும் செயற்படுத்தவுமில்லை,செயற்படுத்துமாறு பரிந்துரைத்த தீர்மானங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தவுமில்லை. ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் மீண்டும் ஆட்சிமாற்றத்துக்காக வீதிக்கிறங்கியுள்ளார்கள்.

ஜனநாயகப் போராட்டம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஜனநாயகத்தன்மையிலான தீர்மானத்தைப் பெற்றுக் கொடுக்கும் எனக் கருதமுடியாது. தற்போது இராணுவ ஆட்சி நிலவும் நாடுகளில் ஆரம்பக்கட்ட போராட்டம் ஜனநாயக ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் ஜனநாயக ரீதியிலான போராட்டம் இராணுவ ஆட்சிக்கு வித்திடக் கூடாது என்பதற்காகவே இடைக்கால அரசைக் கோரியுள்ளோம்.

மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்கும் நிலையில் அரசு இல்லை என்பதைத் தற்போதைய தீர்மானங்கள் ஊடாக விளங்கிக்கொள்ள முடிகிறது. நாட்டு மக்கள் தமக்கான அரசாங்கத்தைத் தெரிவுசெய்யும் வரை இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பதே புத்திசாலித்தனமான தீர்மானமாகும். மக்களின் போராட்டம் தீவிரமடைந்தால் அது அரசுக்கும், நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் . – என்றார்.

# அமெரிக்காவில் மோசடிக் குற்றத்தை ஏற்றுக்கொண்டார் இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய

வொஷிங்கடனில் இலங்கைத் தூதரகத்துக்கென புதிய கட்டடமொன்றை வாங்கும் விவகாரத்தில் 332,02 அமெரிக்க டொலர் மோசடியில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த அமெரிக்காவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய சிற்ரன் விக்கிரமசூரிய அந்தக் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

வொஷிங்டனின் குடிவரவு மற்றும் சுங்க நடவடிக்கைகளுக்கான உள்நாட்டுப் பாதுகாப்பு விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே, தான் குற்றமிழைத்ததார் என ஜாலிய விக்ரமசூரிய ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

ஜாலிய விக்கிரமசூரிய கடந்த 2008 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமெரிக்கா மற்றும் மெக்ஸிக்கோவிற்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றினார்.

அந்தக் காலப்பகுதியில் தான் மோசடியில் ஈடுபட்டார் என கொலம்பியாவிற்கான அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தில் ஜாலிய விக்கிரமசூரிய ஒப்புக்கொண்டிருக்கும் நிலையில், அவருக்கு உயர்ந்தபட்சம் 5 வருட சிறைத்தண்டனையும் குறித்த தொகை அபராதமும் விதிக்கப்படக்கூடும் என்று கருதப்படுகின்றது.

இலங்கை அரசு கடந்த 2013 ஆம் ஆண்டில் வொஷிங்டனில் தூதரகத்துக்கென புதிதாகக் கட்டடமொன்றை வாங்குவதற்குத் திட்டமிட்டபோது, அந்தக் கட்டடத்துக்கான விலையை 332,027 அமெரிக்க டொலர்களென உண்மை விலையைவிட அதிகரித்துக் காண்பிக்கும் வகையிலான ஆவணமொன்றைத் தயாரித்தமையுடன், அந்த நிதியைக் கட்டட நிர்மாணம் மற்றும் விற்பனைத்துறையுடன் எவ்வித தொடர்புமற்ற இரண்டு கம்பனிகளுக்கு மாற்றினார் என்றும் நீதிமன்ற ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த 2015 ஆம் ஆண்டு வொஷிங்டனின் குடிவரவு மற்றும் சுங்க நடவடிக்கைகளுக்கான உள்நாட்டுப் பாதுகாப்பு விசாரணைப்பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 5 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் எரிவாயு கப்பல் திருப்பப்பட்டது

## லாப் நிறுவனம் தகவல்

கடன்பத்திரம் விநியோகிக்காத காரணத்தால் 5 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் எரிவாயு அடங்கிய கப்பல் திருப்பியனுப்பப்பட்டுள்ளதால் எதிர்வரும் புத்தாண்டு காலப்பகுதியில் பாவனையாளர்களுக்கு லாப்ரக சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்படும் என லாப் நிறுவன தலைவர் டப்ள்யூ. கே.எச் வேகபிடிய தெரிவித்துள்ளார்.

எரிவாயு விநியோகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

5 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு உள்ளடங்கிய கப்பலுக்கு 50 கோடி அமெரிக்க டொலர்களை செலுத்துவதற்குக் கடன்பத்திரத்தை விநியோகிக்காத காரணத்தால் நாட்டின் கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டிருந்தகப்பல்திருப்பியனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த எரிவாயு கப்பல் திருப்பியனுப்பப்பட்டுள்ள காரணத்தால் எதிர்வரும் புத்தாண்டு காலப்பகுதியில் பாவனையாளர்களுக்கு லாப்ரக சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்படும் என லாப் நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

லிற்ரோ நிறுவனம் கொள்முதல் செய்துள்ள 3 ஆயிரத்து 800 மெற்றிக்தொன் எரிவாயு அடங்கிய கப்பல் நாட்டை வந்தடைந்தது

தரையிறக்கப்பட்ட 3 ஆயிரத்து 800 மெற்றிக்தொன் எரிவாயு சிலிண்டர்கள் ஊடாக விநியோகிக்கப்படும் நடவடிக்கை துரிதகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாக லிற்ரோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# மாதிபொலப் பகுதியில் ஒருவர் சுட்டு கொலை

கலேவெல-மாதிபொல பகுதியில் நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த நபர் மாதிபொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மாதிபொல பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் கொலைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச வைத்தியசாலைகள் ஸ்தம்பிக்கும் நிலைமை!

*நாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகளில் காணப்படும் மருந்துப் பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக சுமார் இரண்டு வாரங்களுக்குப் போதுமான மருந்துகளே வைத்தியசாலைகளில் இருக்கின்றன என அரச மருந்தாளர் சங்கத்தின் தலைவர் அஜித் திலகரத்ன தெரிவித்துள்ளார் .*

*மேலும் டொலர் நெருக்கடிக்கு எதிர்வரும் இரண்டு வாரங்களில் தீர்வு காணப்படாவிடின், அரச வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துப் பொருள்களை விநியோகிக்க முடியாத நிலை உருவாகுவதோடு மருந்து விநியோகம் நிறுத்தப்படும் அபாயம் ஏற்படும் எனவும் அவர் சுட்டிகாட்டியுள்ளார்.*

*இதே வேளை ‘புற்றுநோய், சிறுநீரக நோய், தலசீமியா உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு அரசு வைத்தியசாலைகளில் ஏற்கனவே மருந்து தட்டுப்பாடு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

# வடக்கு, தெற்கு, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு விடுமுறை!

வடக்கு, தெற்கு, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களின் பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இன்று (திங்கட்கிழமை) இவ்வாறு விடுமுறை வழங்கப்படவுள்ளதாககல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித் துள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த மாகாணங்களில் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள் சேவைக்கு சமுகமளிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஏனைய மாகாணங்களின் பாடசாலை மாணவர்கள் தவணைப் பரீட்சைக்கு மாத்திரம் பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமூக ஊடகங்கள் முடக்கத்தை ஏற்கமாட்டேன் என்கிறார் நாமல்!

சமூக ஊடகங்களை முடக்கும் முடிவை அதிகாரிகள் மீள் பரிசீலனை செய்யவேண்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

மேலும் ’சமூக ஊடகங்களை முடக்குவதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்றதோடு (வி.பி.என்) கிடைப்பது தற்போது நான் பயன்படுத்துவதுபோல அவ்வாறான தடைகளை முற்றாக அர்த்தமற்றதாக்கிவிடுகின்றது’ என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ’அதிகாரிகள் முற்போக்கான விதத்தில் சிந்திக்கவேண்டும் , என்பதோடு முடக்கும் முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டும்’ எனவும் தெரிவித்துள்ளார்.

# லிற்றோ காஸ் வெற்று சிலிண்டர் ஒன்றின் விலை 21 ஆயிரம் ரூபா!

லிற்றோ வெற்று எரிவாயு சிலிண்டரின் விலை 21 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

தலை நகரிலும் அதை தாண்டி பல மாவட்டங்களில் பல மாதங்கள் கடந்தும் சிலிண்டருக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்த நிலையில் வெற்று எரிவாயு சிலிண்டர்களை விற்கும் விளம்பர இணையத்தளங்கள் இது தொடர்பில் விளம்பரங்களை வெளியிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன் 12.5 கிலோ எடையுள்ள லாஃப்ஸ் வெற்று எரிவாயு சிலிண்டர் 16 ஆயிரம் ரூபா வரையிலும், 5 கிலோ சிலிண்டர் 9 ஆயிரத்து 900 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமைதிப் போராட்டங்கள் வன்முறைகளாக மாறுகின்றமையை ஏற்கமுடியாது என்கிறார் ரணில்!



மக்களின் அமைதிப் போராட்டங்கள் வன்முறைகளாக உருவெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், மக்களின் பிரச்சினைகளுக்குச் செவிசாய்த்து அவற்றுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் ராஜபக்ஷ அரசு தோல்வியைச் சந்தித்துள்ளது எனவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் விளக்கமளித்து அவர் வெளியிட்டுள்ள அறிவித்தலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் அரசு தோல்வியடைந்துள்ளது. எதிர்க்கட்சியும் தோல்வியைச் சந்தித்துள்ளது. அமைதிப் போராட்டங்களில் எந்தவொரு நபருக்கும் பாதிப்பு ஏற்படக் கூடாது.

அதேபோன்று வன்முறைக்கும் இடமளிக்கக்கூடாது. மக்களின் போராட்டங்களில் அரசியல் கட்சிகள் பங்குபற்றக்கூடாது.

காலம் கைமீறிப் போயிருந்தாலும் தற்போது நாடாளுமன்றத்துக்கும் பொறுப்பு இருக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாகும்.

அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் இது தொடர்பில் பேசப்பட வேண்டும். எமது பிரச்சினைகளை வன்முறைகளின்றி நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். – எனவும் தெரிவித்துள்ளார்.

## பயங்கரவாத தடை சட்டம் சிங்களவர் மீதும் பாயும் நான் நாடாளுமன்றில் கூறியமை இன்று நடக்கிறது

### தன் தீர்க்கதரிசன கருத்தை முகநூலில் வெளியிட்டார் சாணக்கியன்



நாடாளுமன்றில் நான் அன்று கூறியமை இன்று கண்முன்னே நடக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ முகப்புத்தக பதிவில் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில் –

“அன்று நாடாளுமன்றத்தில் சொன்னேன் சிங்களவரும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் மிக விரைவில் துன்பங்களை அனுபவிப்பார்கள் என்று, இன்று கண்முன்னே நடக்கின்றது. எமது தீர்க்கதரிசனம் என்றும் தவறியதில்லை”. – இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## நியூஸிலாந்து பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுப்பு!

இலங்கையிலுள்ள நியூஸிலாந்து பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள நியூஸிலாந்து உயர்தூதரகத்தால் இவ்வாறு பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருவதாகவும், இதன் காரணமாக எரிபொருள் மற்றும் உணவுப் பொருள்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு வருவதாகவும் நியூஸிலாந்து உயர் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் நீண்ட நேர மின் விநியோகத் தடை முன்னெடுக்கப்படுவதாகவும் நியூஸிலாந்து உயர் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், நாட்டில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுவதாகவும் இலங்கையிலுள்ள நியூஸிலாந்து உயர் தூதரகம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையிலுள்ள நியூஸிலாந்து பிரஜைகள் அவசர நிலைமைகளின் போது நியூஸிலாந்து தூதரகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சிறந்த ஆட்சியை நாட்டில் உருவாக்க அரசு பதவி விலகி வழிவிடவேண்டும்!

### ரிஷாத் கோரிக்கை



நாட்டு மக்களைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டு, அவர்களை நிம்மதியாக வாழ வைக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது. இந்தத் தார்மீக பொறுப்பிலிருந்து அரசாங்கம் ஒருபோதும் தப்பித்துக்கொள்ள முடியாதென மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா – சாளம்பைக்குளத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் பசியாலும் பட்டினியாலும் பொருளாதார நெருக்கடிகளாலும் இன்று வீதிக்கு இறங்கிப் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

“எம்மை வாழ விடுங்கள், எமது பிள்ளைகளை வாழ விடுங்கள்’ என்ற கோஷமே எங்கு பார்த்தாலும் ஒலிக்கின்றது. மக்கள் உண்ண உணவின்றி, வாழ்வதற்கு வழியில்லாமல், வேதனையின் விளிம்பில் இருப்பதாலேயே, நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றனர்.

அவ்வாறான மக்களின் மீது தங்களுடைய அதிகாரத்தைப்பிரயோகித்து, அடக்கி, அச்சுறுத்தி, சிறைப்படுத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. இந்த ஆட்சியாளர்கள் ஆட்சிப் பீடத்தில் ஏறிய நாள் தொடக்கம், கடந்த இரு வருடங்களாக இனவாதத்தையும் மதவாதத்தையும் விதைத்து, இந்த நாட்டைக் குட்டிச்சுவராக்கி விட்டனர்.

இன்று அவர்களுக்கு வாக்களித்த 69 லட்சம் மக்களும் கூட அரசுக்கு எதிராக வீதியில் இறங்கியுள்ளனர். இந்த நிலையில் அரசு உடனடியாகத் தங்களுடைய பதவியிலிருந்து விலகி, நாட்டு மக்கள் விரும்புகின்ற, நாட்டுக்கு நல்லது செய்யக் கூடிய ஓர் ஆட்சியை உருவாக்குவதற்கு வழிவகுக்க வேண்டும்.

ஜனாதிபதியும் ஆட்சியாளர்களும் அமைச்சர்களும் ஒன்றிணைந்து விட்டுக்கொடுப்பு செய்வதன் ஊடாக மட்டும்தான் ஒரு தீர்வைக் காண முடியும். இவர்களால் இந்த நாட்டைக் கொண்டு நடத்த முடியாது என்பதைக் கடந்த இரு வருடங்களில் நிரூபித்துவிட்டனர். இவர்களால் இந்த நாடு தொடர்ந்தும் அதலபாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருக்கிறது.

எனவே, நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து, நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு, இன, மத பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு, மக்கள் விடுக்கின்ற கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர்கள் செவிசாய்க்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றோம். – இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## ஜனநாயக வெளிப்பாட்டுக்கு ஆர்ப்பாட்டங்கள் முக்கியம்

### அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 04

இலங்கை மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமையுள்ளது என அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

மிரிஹானவில் அமைந்துள்ள ஜனாதிபதியின் இல்லத்தை முற்றுகையிட்டு பெரும்திரளான மக்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அமெரிக்க தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது ஜனநாயக வெளிப்பாட்டுக்கு அவசியமானது. நான் நிலைமையை உன்னிப்பாக அவதானிக்கின்றேன். எதிர்வரும் நாள்கள் அனைத்து தரப்பினருக்கும் பொறுமையை கொண்டுவரும் எனக் கருதுகின்றேன்.

துயரத்தில் சிக்குண்டுள்ளவர்களுக்கு மிகவும் அவசியமான பொருளாதார ஸ்திரத்தன்மையையும் நிவாரணத்தையும் கொண்டுவரும் எனவும் எதிர்பார்க்கின்றேன். – எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையில் முதலீடுகள் செய்ய மறுத்த புலம்பெயர் அமைப்புகள்


இலங்கையில் முதலீடு செய்ய முன்வருமாறு இலங்கை அரசு விடுத்த கோரிக்கையை புலம் பெயர் அமைப்புகள் ஏற்க மறுத்துள்ளன எனத் தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கனடா, பிரித்தானியா மற்றும் அமெரிக்காவில் செயற்படும் புலம்பெயர் அமைப்புகள் இவ்வாறு மறுப்பு வெளியிட்டுள்ளன என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூபாவின் மதிப்பு 50 சதவீதம் குறைந்துள்ளதாகவும், இந்த நிலையில் முதலீடு செய்வதில் எந்தப் பயனும் இல்லை என்று புலம்பெயர் அமைப்புகள் கூறியுள்ளன என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், இலங்கையில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கு அரசு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)




# நுட்பவியல் அவத்தை

மெய்நிகர் தனியார் நெட்வொர்க்குகள் -VPN (Virtual Private Network சமூக ஊடகத் தடைகளை தகர்க்கின்றன.

கடந்த பத்து ஆண்டுகளில் சமூக வலைத் தளங்களின் பயன்பாடு மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதையும் இணையத்தைப் பயன்படுத்துவதையும் மாற்றியமைத்துள்ளது. சமூக ஊடகங்கள் வாடிக்கையாளர்களுடன் வணிகங்களை இணைப்பதற்கான ஊடகமாகவும் அதேவேளை பொழுது போக்கானதாகவும் மாறியுள்ளது. மேலும், இது உலகம் முழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்படும் தகவல் தொடர்பு வடிவங்களில் ஒன்றாகியுள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் தூண்டப்பட்ட பொது அமைதியின்மையைக் கட்டுப்படுத்த ஊரடங்குச் சட்டத்தை அரசு விதித்திருப்பதோடு அவசரகால சட்டத்தையும் அமுல்படுத்தியுள்ளது. இதற்கு மேலதிகமாக அரசு சமூக ஊடக தளங்களைத் தடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடியை அரசாங்கம் கையாள்வதற்கு எதிரான போராட்டங்கள் வன்முறையாக மாறியதால், அரசு நாடு தழுவிய ஊரடங்கு உத் தரவை அமுல்படுத்திய பின்னர் சமீபத்திய கட்டுப்பாடுகள் வந்துள்ளன.

'பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட விசேட அறிவுறுத்தல்களின் காரணமாக சமூக ஊடகத் தடை தற்காலிகமாக விதிக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் நலன்களுக்காகவும் மக்களின் நலன்களுக்காகவும் அமைதியைப் பேணுவதற்காக விதிக்கப்பட்டது' என்று தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் தலைவர் ஜயந்த டி சில்வா ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

உலகெங்கும் இதற்கான எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பரவலான எதிர்ப்புகளுக்கு மத்தியில் 'அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதால், டுவிட்டர், பேஸ்புக், வாட்ஸ்அப், யூடியூப் மற்றும் இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட தளங்களுக்கான அணுகலை தடைசெய்து, நாடு தழுவிய சமூக ஊடக முடக்கத்தை இலங்கை விதித்துள்ளதாக நிகழ்நேர நெட்வொர்க் தரவு காட்டுகிறது.




இதேவேளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மருமகனும், நாட்டின் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பதிவில், 'சமூக ஊடகங்களை முடக்குவதை தான் ஒருபோதும் மன்னிக்க மாட்டேன்' என்று தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கும் போது 'நான் இப்போது பயன்படுத்துவதைப் போன்று, வி.பி. என் (VPN) இன் இருப்பு, இத் தடைகளை முற்றிலும் பயனற்றதாக ஆக்குகிறது. அதிகாரிகள் இன்னும் முற்போக்காகச் சிந்தித்து இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.' – என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் இப்போது வி.பி.என் நுட்பியல் அவத்தையில் பலர் ஆர்வம் கொள்கிறார்கள். அது பற்றிய தேடல்களை மேற்கொள்கிறார்கள். உண்மையில் வி.பி.என் அவத்தை என்றால் என்ன?

மெய்நிகர் தனியார் நெட்வொர்க்குகள் (Virtual Private Network) என்பது இணைய பயனர்களை தொலை சேவையகங்களைப் பயன்படுத்தி இணையத்துடன் இணைக்க அனுமதிக்கின்றன, மேலும் இணையம் மற்றும் அனைத்து சமூக வலைப்பின்னல் தளங்களையும் முழுமையாகப் பயன்படுத்த அனுமதிக்கின்றன.

வி.பி.என் தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயம் என்னவென்றால், பொது நெட்வொர்க்குகளில் சில நேரங்களில் நடக்கும் பல்வேறு வகையான தகவல் திருட்டுகளைத் தவிர்க்க உதவும் இணைய இணைப்பை இது வழங்குகிறது. அதாவது, சில பொது




இடத்தில் நெட்வொர்க்கில் பணிபுரிவது, ஹேக்கர்கள் மற்றும் திருடர்களுக்கு எளிதில் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புள்ளது. ஆனால் வி.பி.என் சேவையுடன் இணைப்பது இணைய பயன்பாட்டை மிகவும் பாதுகாப்பானதாக ஆக்குகிறது. வி.பி.என் சேவைகள் இணைய பயனர்களுக்கு பொது நெட்வொர்க்கில் உள்ள மற்ற குறைபாடுகளைத் தவிர்க்க உதவுகின்றன. ஆயினும் வி.பி.என் இனது தெரிவு பற்றி பலவிடயங்கள் காணப்படுகின்றன. தனியே அனைத்து வி.பி.என் களும் எமக்கு பாதுகாப்பான இணைப்பினை வழங்குவதில்லை.

வி.பி.என் சேவையைப் பயன்படுத்துவதன் மூலம், வலைப் பயனர்கள் ஒரு தனி சேவையகத்துடன் திறம்பட இணைக்கின்றனர், இதனால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட இடங்களின் கட்டுப்பாடுகளை மீறி தடை செய்யப்பட்ட தளங்களை அணுக முடியும்.

சில பணியிடங்களில் காணப்படும் சமூக ஊடகத் தடைகளை வி.பி.என் சேவையை அணுகுவதனூடாக தகர்த்தெறிய முடியும். கடந்த காலத்தில் சில உயர் கல்வி நிறுவனங்களில் சமூக ஊடகங்கள் நிர்வாகத்திற்கு அச்சுறுத்தலானவர்களின் பதிவுகள் காரணமாக





தடைசெய்யப்பட்டன.

அதிகாரத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஒன்றாக சமூக ஊடகங்கள் பார்க்கப்படுகின்றன., எதிர்மறையானதாகப் பார்க்கப்படுகின்றது. உண்மையில், சமூக வலைப்பின்னல் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் படங்களைப் பகிர்வதற்கான ஒரு தளமாக இருப்பதை விட மிக முக்கியமானதாகிவிட்டது. உண்மையில், இன்று, பேஸ்புக் மற்றும் ட்விட்டர் போன்ற தளங்கள் உலகெங்கிலும் உள்ள மக்களுக்கான மிகவும் குறிப்பிடத்தக்க தகவல் தொடர்பு முறைகளாக மாறிவிட்டன. இணையத்தில் உள்ள நண்பர்கள் மற்றும் பிற வாசகர்களுடன் செய்திகளைப் பகிர்கின்றன. இதனால், சமூக ஊடகத் தளங்கள் முக்கியம் பெறுகின்றன. சமூக வலைப்பின்னல் தளங்களைப் பயன்படுத்தி மற்றவர்களுடன் தொடர்புகொள்வது மிகவும் முக்கியமானது. இந்த நிலையில் தடை காரணமாக அதனை அணுக முடியாத நிலை காணப்பட்டால் அது ஏற்புடைய ஒன்றாக இருக்காது. இதனால் 'எல்லா சூழ்நிலைகளிலும் இணைய பயனர்கள் தங்கள் சமூக வலைப்பின்னல் கணக்குகளுக்கு அணுகலைப் பெறுவார்கள் என்று வி.பி.என் சேவைகள் உத்தரவாதம் அளிக்கின்றன.' வி.பி.என் சேவைகள் எங்கிருந்தும் சமூக ஊடக தளங்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான இணைப்புகளை எளிதாக்குகின்றன.

வி.பி.என் சேவைகளை இணைப்பது என்பது பொது வயர்லெஸ் இணைய நெட்வொர்க்குகளின் இயல்பான வரம்புகளுக்கு வெளியே இணைய பயனர்கள் வேலை செய்ய முடியும் என்பதாகும். வி.பி.என் சேவைகள் தொலைநிலை சேவையகத்துடன் இணைப்பை வழங்குகின்றன, பொதுவாக மேம்பட்ட நிலை குறியாக்கம் மற்றும் பாதுகாப்பைக் கொண்டிருக்கும். ஹேக்கர்கள் அல்லது அடையாளத் திருடர்கள் கடவுச்சொற்கள் மற்றும் மிக முக்கியமான தகவல்களைத் திருடக்கூடிய சூழ்நிலைகளில், வி.பி.என் சேவைகள் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை வழங்குகின்றன.

வி.பி.என் சேவையைப் பயன்படுத்தி சமூக ஊடகத்துடன் எந்தத் தடையிருந்தாலும் இணைப்பை ஏற்படுத்த முடியும். மாணவர்கள் முதல் தொழிலாளர்கள் வரை தங்கள் தரவு மற்றும் தகவல்களைப் பாதுகாக்க விரும்பினால் அதற்கு சரியாக தேர்ந்தெடுக்கப்படும் வி.பி.என் சேவைகள் முக்கியமானவை. இந்த சேவை இலவசமாகவும் கட்டணத்திற்கும் கிடைக்கின்றன. வி.பி.என் மூலம் இணையத்துடன் இணையும் போது, ஒருவரின் தரவு போக்குவரத்து அனைத்தும் மறைகுறியாக்கப்பட்ட நுட்பியல் அவத்தையில் அனுப்பப்படும். இதனால், இணையத்தில் ஒருவர் அநாமதேயமாக இருப்பார். பயன்படுத்தப்படும் கணனியின் உண்மையான ஐ.பி முகவரி (I.P Address)மற்றும் இருப்பிடம் மறைக்கப்படும். இது மறைகுறியாக்கப்பட்ட சுரங்கப்பாதையில் பயணிப்பது போன்றது. ஹேக்கர்கள் மற்றும் சைபர் கிரைமினல்களை விலக்கி வைக்கும். எனினும் பாதுகாப்பற்ற வி.பி.என் பாவனையின் போது எம்மை அவர்கள் ஹேக் செய்யவோ முடக்கவோ முடியும். அதேபோன்று வி.பி.என் இணைப்பின் மூலமாக ஒருவர் வேறொருவருக்கு இலகுவில் தொல்லை கொடுக்கவும் முடியும். எனவே இந்த நுட்பியல் அவத்தையில் தனியே நன்மையினை மட்டும் பெறமுடியும் என்பது சவாலாகும்.



காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய அத்துமீறல்கள் மிகவும் குறைந்துள்ளனவாம்!

## பெருமிதப்படுகிறார் அமைச்சர் டக்ளஸ்

இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய செயற்பாடு அண்மைய நாள்களாகக் குறைவடைந்துள்ளன என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரித்துள்ளார்.

யாழில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற கடற்தொழில் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்ட ஒரு பகுதியில் கடற்றொழிலாளர்களுக்கான மனிதாபிமான உதவிப் பொதிகள் வழங்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில் செயற்பாடுகள் அவதானிக்கப்படுமாயின், அதற்கெதிராக வடக்கு கடற்தொழிலாளர்கள் ஜனநாயக வழியில் தமது அதிருப்தியை வெளியிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பல்வேறு காரணங்களால் பாதிப்புக்களை எதிர்கொண்ட வட பகுதி கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதற்கான பல்வேறு உதவித் திட்டங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைய வழங்குவதற்கு இந்தியா முன்வந்துள்ள நிலையில், முதல் கட்டமாக வழங்கப்பட்டுள்ள மனிதாபிமான உதவிகள் கட்டங்கட்டமாக கடந்த சில வாரங்களாக வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்கள் இன்னும் சில வாரங்களில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விடும் என்று நம்பிக்கை வெளியிட்ட கடற்தொழில் அமைச்சர், எதிர்க்கட்சிகள் எதிர்பார்ப்பதைப் போன்று தற்போதைக்கு ஆட்சி மாற்றம் ஏற்படாது. - எனவும் தெரிவித்தார்.



# இந்த ஜனநாயக விரோத அரசு மக்கள் எழுச்சியால் விரட்டப்படும்!

## எம். உதயகுமார் எம்.பி. நம்பிக்கை

மக்கள் எழுச்சியால் இந்த ஜனநாயக விரோத அரசு விரட்டியடிக்கப்படும். அதற்கு மலையக மக்களும் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும். நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். உதயகுமார் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்த அரசின் வீழ்ச்சிப்பயணம் ஆரம்பித்துவிட்டது, ராஜபக்ஷ குடும்பம் நாட்டைவிட்டு ஓடத் தயாராகி விட்டது. ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பில் பெரிதாகப் பேசப்பட்டது. மீட்பாரென வர்ணிப்புகள் இடம்பெற்றன. ஆனால் இன்று அவர் புஷ்வாணமாகியுள்ளார். தம்மால் நாட்டை ஆள முடியாது என்பதை ஜனாதிபதி உள்ளிட்ட இந்த ஆட்சியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நாடு இன்று பாதாளத்துக்குள் விழுந்துள்ளது. கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையை ஏற்படுத்திய அரசை விரட்டியடிப்பதற்கான போராட்டத்தை நாம் 15 ஆம் திகதி கொழும்பில் நடத்தினோம். அந்த எழுச்சியின் பின்னரே தன்னெழுச்சி போராட்டங்கள் உருவாகியுள்ளன.

ஊரடங்கு உத்தரவை பிறப்பித்து போராட்டங்களை ஒடுக்க முடியாது. அது நடக்காவிட்டாலும் பிறிதொரு நாளில் நிச்சயம் அது நடக்கும். மக்களின் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முற்படக்கூடாது. மக்கள் எழுச்சியால் இந்த அரசு விரட்டியடிக்கப்படும். சஜித் பிரேமதாஸ தலைமையில் மக்கள்



ஆட்சி மலரும். அதில் தமிழ் முற்போக்கு கூட்டணியும் பிரதான பங்காளியாக அங்கம் வகிக்கும். இந்த அரசுக்கு சாவு மணி அடிப்பதற்கான நடவடிக்கையை தலவாக்கலை மண்ணில் விரைவில் ஆரம்பிப்போம். - என்றார்.

# நாட்டில் ஆர்ப்பாட்டங்களைப் பயன்படுத்தி அடிப்படைவாதத்தை தூண்ட அரசு முயற்சி

## ஜே.வி.பி. பொதுச்செயலர் சுனில் சாடல்

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றவாளிகள் அல்லர். எனவே, கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் நிபந்தனைகள் இன்றி விடுதலைசெய்யப்பட வேண்டும். ஆர்ப்பாட்டங்களைப் பயன்படுத்தி அரசாங்கம் அடிப்படைவாதத்தைத் தூண்டுவதற்கு முயற்சிக்கிறது.

எனினும் இவ்வாறான சூழ்ச்சிகள் இனி வெற்றி பெறா என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மக்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள போதிலும், அரசு சுக போகங்களை அனுபவிப்பதை நிறுத்தவில்லை. மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் குரல் கொடுப்பதற்கும் அரசாங்கம் தயாராக இல்லை. மாறாக மக்களின் ஆர்ப்பாட்டங்களை அடக்குமுறைகள் ஊடாக முடக்குவதற்கே முயற்சிக்கிறது.

மிரிஹான பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பொது மக்கள் மாத்திரமின்றி ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டுள்ளனர்.

இதன் போது கைது செய்யப்பட்டவர்களை முதலில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்கு முயற்சித்த அரசு, பின்னர் பொதுச் சொத்து பாதுகாப்புக் கட்டளை சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தது. எவ்வாறிருப்பினும் கைது செய்யப்பட்டவர்களில் சிலர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகளை மீண்டும் முன்னெடுக்க வேண்டாம் என்று அரசு வலியுறுத்துகின்றோம். அடக்குமுறைகள் ஊடாக மக்களின் குரலை முடக்க முடியாது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் கைது செய்யப்பட்டவர்கள் குற்றவாளிகள் அல்லர். அவர்கள் எவ்வித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும். உண்மையான குற்றவாளிகள் அரசு இருக்கின்றனர்.

சட்டத்தின் மூலம் மக்களைக் கட்டுப்படுத்த முடியாது. காரணம் சட்டத்துறையும் மக்களுடனேயே இருக்கிறது. மக்களை எதிர்கொள்ள முடியாத அரசு அவசரகால நிலைமை சட்டத்தை நடைமுறைப்படுத்தி அவர்களின்



ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறது. அது மாத்திரமின்றி ஆர்ப்பாட்டங்களைப் பயன்படுத்தி அடிப்படைவாதத்தைத் தூண்டவும் முயற்சிக்கிறது.

மிரிஹானையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் அரசைச் சேர்ந்த சிலர் நுழைந்து, அரசாங்கத்தின் தேவைக்கு ஏற்பவே அங்கு வன்முறையான சூழலை தோற்றுவித்துள்ளனர் என்ற சந்தேகம் நிலவுகிறது. ஆனால் மக்களுக்குத் தெரியாமல் எந்தவொரு சதிச் செயலையும் அரசு செயற்படுத்த முடியாது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். - என்றார்.

# மூதாட்டி கொலை சந்தேகநபர் கைது!

## சாய்ந்தமருதில் சம்பவம்

சாய்ந்தமருது பகுதியில் கடந்த ஜனவரி மாதம் மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தலைமறைவாகி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விடுதி ஒன்றில் தங்கி இருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதி புதுப்பள்ளி வீதியிலுள்ள வீடொன்றில் தனித்திருந்த சுலைமான் செய்யது புஹாரி (வயது - 83) என்ற மூதாட்டி கடந்த ஜனவரி மாதம் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கொலை செய்யப்பட்ட மூதாட்டி வசம் இருந்த தங்க ஆபரணங்கள் கொலையாளியால் அபகரிக்கப்பட்டிருந்தமையுடன் சந்தேகநபர் மூதாட்டியை கொலை செய்து விட்டு தலைமறைவாகி இருந்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு சந்தேகநபரை தேடி வந்தனர்.

இந்நிலையில் சனிக்கிழமை மாலை மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் புலனாய்வு உத்தியோகத்தரின் தகவல் ஒன்றுக்கமைய மட்டக்களப்பு விடுதி ஒன்றில் குடும்பத்துடன் தங்கி வாழ்ந்த கொலைச்சந்தேக நபர் கைதானார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தற்போது அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்காக தற்காலிகமாக தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும், சந்தேக நபர் 48 வயது மதிக்கத்தக்கவர் எனவும் கல்முனை பகுதியினை வசிப்பிடமாக கொண்டவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ். எல். சம்சுதீன் தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், கொலைச் சம்பவம் மூதாட்டியிடம் இருந்த நகைகளை அபகரிக்கும் நோக்கில் நடந்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 250 சாராயப் போத்தல்களுடன் மட்டக்களப்பில் ஒருவர் கைது!

மட்டக்களப்பு நகரில் சட்டவிரோதமாக ஏறாவூர் குடியிருப்பு பிரதேசத்துக்கு மதுபானங்களை பட்டா ரக வாகனத்தில் விற்பனைக்காக எடுத்துச் சென்ற ஒருவரை 250 கால் மதுபானப் போத்தல்களுடன் சனிக்கிழமை இரவு 6.30 மணியளவில் கைது செய்துள்ளோம் என மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சம்பவதினமான சனிக்கிழமை இரவு 6.30 மணியளவில் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் கோட்டமுனை பாலத்துக்கு அருகில் பட்டா ரக வாகனத்தில் மதுபானங்களை எடுத்துச் சென்ற வாகனத்தை சுற்றிவளைத்து சோதனையிட்டனர்.

இதன் போது ஒருவரைக் கைது செய்தமையுடன் 250 கால், மதுபான போத்தல்களை மீட்டதுடன் பட்டாரக வாகனத்தை கைப்பற்றியுள்ளனர். இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கையில் அங்கிலிக்கன் திருச்சபை நிறுவனங்களின் பெரும் வீழ்ச்சி



ஜோன் தேவதாசன்
(பரி.யோவான் கல்லூரியின் பழைய மாணவன், லண்டன்)

### திருச்சபையின் உச்ச நிலை

அதனிடமிருக்கும் பணத்தைப் பார்த்தால் அங்கிலிக்கன் இலங்கை திருச்சபை சிறப்பான நிலையில் உள்ளது. கடைசி வருடாந்த அறிக்கையின் படி இரண்டாயிரம் கோடி ரூபா முதலீட்டில் உள்ளது. இதற்கு மேலாக பல நூற்றுக்கணக்காண ஆலயங்கள், குருமனைகள், காணிகளென்றதற்கு உள்ளன. அங்லிக்கன் கல்லூரி நிறுவனங்கள் பெயர் பெற்றவை. பரி. யோவான் கல்லூரி 1890 அளவிலேயே அதிபர் CC ஹன்டியின் எத்தனத்தால் பல்கலைக்கழக படிப்புகளை ஆரம்பித்தது. 1959 போல் ஏறத்தாழ 30 பேர் உடைய வகுப்பில் ஒருவரை விட ஏனையோர் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு அனுமதி பெற்றனர். இது எல்லாம் ஞாயிறு தோறும் தொழும் 20,000 பேருக்கே. இந்த ஐஸ்வரியம் சந்தோஷத்திற்கு உரியது போலும்.

### ஜன வெளியேற்றம்

ஆனால், கொஞ்சம் கிண்டினால் சுதந்திரம் பெற்ற காலத்தில் 100,000 க்கும் மேற்பட்டவர்கள் ஞாயிறுகளில் தொழ வருகை தந்திருந்தனர். SWRD பண்டார நாயக்கா, JR ஜயவர்தன போன்றவர்கள் அங்லிக்கன் திருச்சபையிலிருந்து புத்த சமயத்திற்கு மாறிவிட்டனர். உயர் ஸ்தானங்களில் உள்ள தமிழ் அங்லிக்கன் சபை யாரில் ஏறத்தாழ யாவரும் மேற்கத் தேய நாடுகளுக்கும் அவுஸ்திரேலியாவிற்கும் சென்றுள்ளனர். செல்லமுடியாதவர்கள் அல்லது கொழும்பில் குடியேறியவர்கள் ஒன்றில் வீசா மறுக்கப்பட்டவர்கள் அல்லது இங்கேயே பெரிய வருமானம் எடுக்கக்கூடிய மருத்துவர்கள் போன்றவர்கள்.

புதிய யாழ் பரி. யோவான் கல்லூரி நிர்வாகியின் Christian Community Church கொழும்பு இதனால் சபை நிறுவனங்களை நிர்வாகிக்க தகுதியானவர்கள் இன்று மிகக்குறைவு. இதன் ஓர் அறிகுறி இங்குள்ள தமிழ் அங்லிக்கன் சபை குருமாரில் ஒரேயொருவரே ஒரு தேசிய பல்கலைக்கழகத்தில் முதல்பட்டம் பெற்றவர். இவர்களுக்கு திருச்சபை கொடுக்கும் பட்டப்படிப்பு இன்று வரை மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெறவில்லை.

### சலாம் கலாச்சாரம் - கல்விப் பாலைவனம்

இந்த நிலைமையின் விளைவு என்ன? ஏற்கனவே ஒரு நிறுவனத்தினுள் புகுந்தவர்கள் புதியவர்களை எவ்வளவு தகுதிமிக்கவர்களாய் இருந்தாலும் தடுத்து விடுவார்கள். இதற்கு ஒரு நல்ல உதாரணம் காலம் சென்ற பரி. யோவான் கல்லூரி அதிபர் CE ஆனந்தராஜனின் மகன் ஜயந்தா, ஏற்கனவே கனடாவில் மதிப்புமிக்க பள்ளிக்கூடமொன்றில் உதவி அதிபாராக இருந்து, இலங்கைக்கு வந்து, அப்போது இருந்த உப அதிபர் பதவி வெற்றிடத்தில் ஆர்வம் காட்டியபோது, அவரை அழைக்க ஒன்றும் செய்யப்படவில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் ஒரு கல்விப்பாலைவனத்தை உண்டாக்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஒரு கலந்துரையாடல் ஒழுங்குபண்ணுவதென்றால் வருபவர்கள் பேச்சைக் கேட்க ஆவலாய் வருவதில்லை. மாறாக தமது வேலைஸ்தல தலைவர் போகச்சொன்னதால் பயத்தில் அல்லது தமக்கு அறிந்த பேச்சாளரின் கீர்த்தியை எழுப்ப வருகின்றனர். கேட்போரை வரப்பண்ண தேநீர் உபசாரம் மட்டும் அல்ல ஒரு பேனையும் ஒரு கொப்பியும் அல்லது எழுத்துத் திண்டும் கொடுத்தால் இன்னும் நல்லது.

### பிழையான ஜெபபுஸ்தகம்

உள்ளே ஏற்கனவே உள்ளவர்களும் தமது திறமையை காட்ட பல போலி காரியங்களைச் செய்வார்கள். ஓர் உதாரணமாக தமது நண்பர்களில் நிர்வாகத்தில் எழுப்பவிரும்பியவர்களை பதவி உயர்த்துவதற்காக தமக்குப் பந்தம்பிடிக்கத் தயாரானவர்களுக்கு சகல பொறுப்புகளையும் முதல் கொடுத்து, பின்பு அதைக் காட்டி அந்தந்த பதவி உயர்வுகளை கொடுப்பார்கள். அந்தப் பொறுப்புகளை செய்யும் போது எந்த பிழை விட்டாலும் அதைச் சுட்டி காட்ட அந்த நிறுவன மக்கள் பயப்படுவார்கள். ஓர் உதாரணமாக, திரியேக கல்லூரி, பரி. யோவான் கல்லூரியில் ஒருவர் GCE O/Level இல் ஓரிரு தரம் குண்டடித்து, பின்பு கடவுளின் அழைப்பு தனக்கு வந்த தென்று சொல்லி வண. பிதா ஆகினார். பின்பு அவரை மேம்படுத்தும் நோக்கத்தில் போல், அவரது கல்விப் பிரச்சினைகளைக் கருதாமல் அவருக்கு தமிழ் ஜெபப்புஸ் தகத்தை எழுதும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. அவருடைய படைப்பு 10 கற்பனைகளில் ஒன்றை மறந்ததாகவும், ஓர் இடத்தில் 'புனிதமும் அழிவும் இல்லாதவரே' என்று பக்தர்களைத் தேவதூணம் பேச வைக்கின்றது. (ஏன் பிழை என்பது அந்த வண. பிதாவுக்கு விளங்கவே மறுக்கிறது!).

இந்த சலாம் போட வளர்க்கபட்ட சபையில் பலர் வண. பிதாவின் ஆக்கத்தை என்ன திறமானது என்று புகழ்கின்றனர். அப்படியே பழக்கப்பட்டும் விட்டனர். இன்று வரை திருத்தப்படவில்லை. இப்பிழைகள் பழைய அத்தியட்சகர் (Bishop) டிலோ கனகசபைக்கு 2010இல் சுட்டிக்காட்டப்பட்டும் அவர் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இன்றும் திருத்தப்பட்ட ஜெபபுஸ்தகத்தை அச்சடிக்க முன்பு சரிபாருங்கள் என்று அழைக்க, எல்லாம் சரி என்றனர் – சோம்பேறிகளா அல்லது அத்தியட்சகரின் தகைமையற்ற நண்பர்களின் வேலையில் பிழைகூற மறுப்போ தெரியவில்லை.

ஆடையில்லாத சக்கரவர்த்தி என்ற ஆங்கிலக் கதையில் தையற்காரன் ஒருவன் பணமில்லாமையால் சக்கரவர்த்திக்கு இது கண்ணுக்குத் தெரியாத சேலையில் தைத்தது என்று ஏமாற்றி உடுத்துவித்த அந்த கதையில், இல்லாத ஆடையை உடுத்து பேரரசன் நிர்வாணமாக தெருவில் பவனி செல்ல மக்கள் யாவரும் 'என்ன அழகு!' என பயத்தில் போற்றினர். ஒரு பையன் 'எங்கே உடுப்பு?' என்று கேட்கத்தான் சக்கரவர்த்திக்கு தான் உரிந்த நிலையிலிருக்கிறேன் என்ற ஞானம் பிறந்தது. அங்லிக்கன் திருச்சபையில் உண்மை பேசப்பயமற்ற அந்தப் பையன் போன்றோர் இன்று அரிதாகிவிட்டனர்.

தமிழருக்கான ஊழியத்தை "கூலி மிஷன்" என்று பெயரிட்ட திருச்சபையானது தமிழரை "அவர்கள் கூலிக்காரர்கள் தானே, அவர்கள் கடவுளை புனிதம் இல்லாதவர் என்றால் அது பரவாயில்லை" என்று சொன்னது போல் அல்லவா இருக்கிறது? தமிழரென்றால் அத்தியட்சகர் அவர்களை தேவநிந்தனை செய்விக்கலாமா? தமிழர்கள் மூடரா? தனது பிள்ளைகள் அவரை தாத்தி என்று அழைக்கும் அத்தியட்சகர் கனகசபையும் தமிழ் கிறிஸ்தவர் பக்தியழிப்பில் ஓர் அக்கறையும் காட்டாதிருந்தார் போல் பட்டது.

இப்படிப்பட்ட வழிகளில் திருச்சபையிலும் திருச்சபை நிறுவனங்களிலும் தகுதியற்றவர்களின் கை ஓங்கிற்று. பள்ளிக்கூட நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் திருச்சபை மிஷன் சங்கம் (Church Missionary Society, CMS) என்பது மிகப் பிரதான இடத்தை வகிக்கிறது. இது ஒரு காலத்தில் பல திருச்சபை பள்ளிக்கூடங்களை நிர்வகித்தாலும் 1960 இல் பள்ளிக்கூடங்கள், மற்றும் திறமான வாத்தியார் பயிற்சி ஸ்தானங்களும் தேசியமயமாக்கப்பட்ட பின்பு, 5 பள்ளிக்கூடங்களே CMS பள்ளிக்கூடங்களாக இன்று உள்ளன. இவை யாழ்ப்பாணத்தில் பரி. யோவான் கல்லூரியும் சுண்டிக்குளி பெண்கள் பாடசாலையும், தெற்கில் லேடீஸ் கொலிஜூம், மோபிரே கொலிஜூம், ஹில்வுட் கொலிஜூம் ஆகும்.

அதனால் CMS ஆனது ஆரம்பத்தில் கல்வியில் பெரியவர்களை கொண்டிருந்தது. ஒரு காலத்தில் பரி. யோவான் கல்லூரியின் அதிபர் JT அருளாநந்தம் இலண்டனில் உள்ள CMS தலைமை காரியாலயத்தில் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார்.

### வீழ்ச்சி

இந்த உச்சத்திலிருந்த எமது பாரம்பரியம் பெரிய வீழ்ச்சியை கண்டுள்ளது. டுலிப் சிக்கேரா அத்தியட்சகராக இருந்தபோது, CMSக்கு அங்கத்தவர்களாக அந்த அத்தியட்சகரின் தனிஉதவியாளரின் மனைவியானவர் அவர் GCE உயர்தரம் மட்டும் படித்தவராயிருந்தும் அத்தோடு கேம்பிரிஜ் சீனியர் அதாவது இன்றைய G.C.E சாதாரண தரத்தையும் கடக்காதவர் என்று நம்பப்படும் கௌரவமுள்ள ஹன்டி குடும்பத்தை சேர்ந்த வயோதிப பெண்ணும் நியமிக்கப்பட்டார். ஆனால் என் குறிப்பு என்னவெனில் இவர்கள் நிர்வாகிக்கும் கல்லூரி அதிபர்மார் யாவரும் இவர்களைவிட தரம் கூடியவர்கள்.

இதே காலத்தில் நடந்த ஒரு பெரிய பிழையான காரியத்தை கீழே விவரிக்க உதவும் ஒரு முற்குறிப்பு. தொழில்முறை படிப்பு மற்றும் கல்விப்பட்டப் படிப்பு என்று இரு வகையான கல்விப்பாதைகள் உள்ளன. இவற்றிற்கிடையான வித்தியாசம் இவ்வாறு கூறப்படும்:-

தொழில்முறை பட்டப்படிப்பு ஒன்று வேலைக்குத் தேவையான திறன்களை உங்களுக்கு பயிற்றுவிக்கிறது, ஆனால் ஒரு கல்விப்பட்டம் ஒரு குறிப்பிட்ட பாடத்தில் உங்கள் ஒட்டுமொத்த அறிவை மேம்படுத்தவும், உங்கள் சிந்தனை எல்லைகளை விரிவு படுத்தவும் மற்றும் உங்கள் ஆளுமையை மேம்படுத்தவும் உதவுகிறது.

இது பொதுவாக கைக்கொள்ளப்படும் கருத்து. தொழில்முறை கல்விகற்றவரிற்கு பொதுவான பரந்த காரியங்களைக் கற்றுப் பேசவோ விமர்சிக்கவோ கல்வி கொடுக்கப்படுவதில்லை. இதனாலேயே மாணவர் முதல் பல்கலைக்கழகத்தில் நுழைய எத்தனித்து, இதில் தோல்வியுற்றாலேயே சட்டக் கல்லூரிப் படிப்பு, நிர்வாகப்படிப்பு அல்லது கணக்காளர் படிப்பு போன்ற தொழில்முறை படிப்புகளுக்கு திரும்புவது காணலாம். ஏனெனில் பல்கலைகழகத்தில் படித்து, ஒட்டுமொத்த அறிவு மேம்படுத்தப்பட்டு மூளையின் எல்லைகள் விரிவாக்கப்பட்டபின் எந்த தொழில்முறை படிப்பையும் சுலபமாக படித்துக் கொள்ளலாம் என்பதே பொதுவான நம்பிக்கை.

தொழில்முறை படிப்பிற்கு சென்றவர்களுக்கு ஆழமான அறிவுசார் பயிற்சி கொடுக்கப்பட்டாமையால் அவர்களுக்கு தொழிலை முன்னேற்றம் தரும்படி திசை மாற்றுவது கஷ்டம். தொழில்முறை படிப்பிற்கு பணம் உழைக்கும் வாய்ப்புள்ளதால், அந்தப் படிப்பை கொடுக்க பல நிறுவனங் கள் காளான் போல ஸ்தாபிக்கப்படுவதால் (உதாரணமாக ICMA கற்பிக்கும் கொழும்பு நிலையங்கள்) அந் நிறுவன தரத்தை நம்பமுடியாது.

(மிகுதி நாளை தொடரும்....)

காலைக்கதிர்
Kalaikkathir

# அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட பேராதனைப் பல்கலை மாணவர்கள் மீது தாக்குதல்





பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் நேற்று அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர்.

கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களைப் பொலிஸார் கலைத்தனர்.

நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து பேராதனை – கலஹா சந்தி வரை மாணவர்கள் பேரணியாகச் செல்ல முற்பட்டபோது பொலிஸாரால் இவ்வாறு கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஊரடங்கு உத்தரவை மீறி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதால் அதற்கு எதிராகத் தாம் நடவடிக்கைகளை எடுத்தனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊரடங்குச் சட்ட உத்தரவை மீறிய 664 பேர் மேல் மாகாணத்தில் கைது

பொலிஸ் ஊரடங்குச் சட்ட உத்தரவை மீறிய மீறிய 664 பேர் மேல் மாகாணத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் 10 மணி முதல் நேற்று அதிகாலை 6 மணி வரை இந்த நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## 12 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் சிக்கினர்



(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 12 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 12 மீனவர்களையும் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டிக்கு அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### காட்டுமிராண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களின் பங்கேற்புடன் கொழும்பு சுதந்திர சதுக்கத்துக்கு அருகில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் எதிர்பார்ப்பை தவிடுபொடியாக்கிய இந்த அரசை ஒருகணமேனும் ஆட்சியில் தக்க வைக்க இந்நாட்டு மக்கள் தயாராக இல்லை.

இந்த அரசு ஜனநாயக ரீதியாக மக்கள் ஆதரவின் பெயரால் தூக்கியெறியப்படும். நாம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் முகமாக உறுதியாக முன்நிற்கின்றோம்.

இந்த அரசு நாட்டு மக்களை மயானத்தின் பக்கம் தள்ளிக்கொண்டிருக்கின்றது. இந்தக் காட்டுமிராண்டித்தனமான அரசை முற்றிலுமாக வீழ்த்தி தூக்கி எறிய வேண்டும் – என்றார்.

### முன்னணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலைமைகள் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரனின் ஊடகச் சந்திப்புக்காக ஊடகவியலாளர்கள் கட்சி அலுவலகத்துக்குச் சென்றபோது பொலிஸார் அதற்கு அனுமதிக்காததால் குழப்பமான நிலைமை ஏற்பட்டது.

அங்குசென்றஊடகவியலாளர்களின் பெயர் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு அடையாள அட்டைகள் பரிசோதித்து கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் ஊடக சந்திப்புக்களை நடத்த முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்துப் பொலிஸாருடன் நாடாளுமன்ற உறுப்பினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் அதிகளவில் பொலிஸாரும் குவிக்கப்பட்டதால் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

## ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவு பேருரை நிகழ்வு





மன்னார், ஏப்ரல் 04

மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் அமரர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு ஆண்டகையின் நினைவு பேருரை மன்னாரில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) மாலை இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர் களாக மட்டக்களப்பு திருமலை ஓய்வு நிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார், மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறை பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டஹிமையோடு, அருட்தந்தையர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் உருவபடத்துக்கு மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மறைந்த மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவு பேருரை நூலை ஓய்வு நிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை வழங்கி வைத் தார். அதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகள் இடம்பெற்றன.

நினைவுப் பேருரையை மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், யாழ் பல்கலைக்கழக அரசறிவியல்துறை பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத் தின் தலைவர் வி.எஸ். சிவகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

நினைவுப் பேருரையினை மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறை பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் ஆகியோர் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கு உட்பட 4 மாகாணங்களின் பாடசாலைகளுக்கு இன்று தொடக்கம் லீவு

கொழும்பு, ஏப். 04


இன்று முதல் வடக்கு, தெற்கு, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களின் பாடசாலை மாணவர்களுக்கு முதலாம் தவணை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த மாகாணங்களில் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள் சேவைக்குச் சமூகமளிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய மாகாணங்களின் பாடசாலை மாணவர்கள் தவணைப் பரீட்சைக்கு மாத்திரம் பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சமூக வலைத்தளங்கள் தடையால் அரசுக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு மேலும் அதிகரிப்பு!




## அரசியல் ஆய்வாளர்கள் கருத்து

நாள் முழுவதும் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப் படுத்தியமை மற்றும் சமூக வலைத்தள ஊடகங்களுக்கு தடையேற்படுத்தியமை ஆகியன காரணமாக அரசின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி மேலும் அதிகரிக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அரசுக்கு தமது அதிருப்தியை தெரிவிக்க நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டங்கள் அரசியல் கட்சிகளின் வழிநடத்தல் இன்றி நடத்தப் படவிருந்தன.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த மக்களுக்கு இருந்த உரிமை ஊரடங்குச் சட்டம் மற்றும் சமூக வலைத்தளத் தடை என்பன காரணமாக இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன.

இது மக்களுக்கு இருந்த கஷ்டங்களை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளதுடன் மக்கள் மத்தியில் காணப்படும் இந்த அழுத்தம் வெடித்துச் சிதறினால், அது நாட்டுக்கு நன்மை தரும் நிலைமையாக இருக்காது எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

# நாட்டை விட்டுப் பறந்தார் நிதி அமைச்சர் தென்னிலங்கை ஊடகம் பரபரப்புச் செய்தி

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன. தென் னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட் டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவர் இன்னும் இலங்கையிலேயே தங்கியிருக்கிறார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், நாட்டின் பல இடங்களிலும் போராட்டங்கள் வெடித்துள்ளன.

இதனால் நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஊரடங்கு சட்டமும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, நிதியமைச்சர் ஏப்ரல் முதல் வாரத்தில் அமெரிக்கா செல்வதற்கு முன் ஏற்பாடுகளை செய்திருந்தார். இந்த விஜயத்தின் போது அவர் சர்வதேச நாணய நிதியத்துடனும் பேச்சு நடத்த உள்ளார்.



# சர்வதேச நாணய நிதியத்தைக் கையாள தமிழரை நம்பி இறங்கியுள்ள கோட்டா!

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் தமக்கு உதவ மூன்று பேர் கொண்ட ஆலோசனைக் குழுவை நியமித்துள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இதில் இரு தமிழர்கள் அடங்கியுள்ளமை முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி மற்றும் ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் உலக வங்கியின் முன்னாள் பொருளாதார நிபுணர் சாந்தா தேவராஜன் ஆகியோர் அதிக் அடங்குவர் என்று ஆங்கில செய்தித்தாள் ஒன்று கூறுகிறது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்கவின் ஆலோசனையின் பேரில் மூன்றாமவராக திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் சர்மினி குரே நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், சர்வதேச நாணய நிதியத்தின் ஆப்பிரிக்காவுக்கான துணை இயக்குநராக இருந்தவராவார்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுக்கான இலங்கைக் குழுவில் யார் இடம்பெற வேண்டும் என்பதில் இன்னும் முடிவுகள் எட்டப்படவில்லை.

இதற்கிடையில் இலங்கை அரசாங்கம் மேலும் 25 கோடி அமெரிக்க டொலர்களை பங்களாதேஷிடம் கடனாகக் கோரியுள்ளது.

பிம்ஸ்டாக் உச்சி மாநாட்டுக்காக கொழும்பு வந்த பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் அப்துல் மொமன் மூலமாக இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பங்களாதேஷிடம் இருந்து 20 கோடி அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொண்ட இலங்கை, பின்னர் மீளக்கொடுப்பனவையும் ஒத்திவைத்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவில் அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.

எனினும் சர்வதேச நாணய நிதியத்துடனான உத்தியோகபூர்வ மட்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னரும் அந்த அமைப்பில் இருந்து அவசரமாக எந்த ஒரு நிதியும் வழங்கப்பட வாய்ப்பில்லை என்று அறியப்படுகிறது.

# முட்டையின் விலை 50 ரூபாவாக எகிறும்?



*ஒரு முட்டையின் விலை 50 ரூபாவாக உயர்வடையும் சாத்தியங்கள் காணப்படு கின்றன எனச் சந்தை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*நாட்டின் முட்டை உற்பத்தி 40 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என அகில இலங்கை கோழி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.*

*கோழி தீவனங்களுக்கான தட்டுப்பாடு மற்றும் காலநிலை காரணிகளால் இவ்வாறு உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்*

*சிறிய அளவிலான கோழிப் பண்ணைகள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார். சிறிய முட்டை உற்பத்தியாளர்கள், தங்களது உற்பத்திகளிலிருந்து விலகிக் கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.*

*தற்பொழுது முட்டை 30 முதல் 33 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டையின் விலை 50 ரூபாவை எட்டும் சாத்தியம் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.*

# யாழில் ஜே.வி.பியின் ஊடகவியலாளர் மாநாட்டில் குவிக்கப்பட்ட இராணுவம்



யாழ்ப்பாணத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், அலுவலகத்துக்கு முன்னால் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது பல ஊடகவிலாளர்கள் மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்திற்கு சென்றிருந்தனர்.

இந்த நிலையில் திடீரென அந்த இடத்திற்கு வந்த பொலிஸார் அலுவலகத்துக்கு முன்பாக திரண்டதுடன், அலுவலகத்திலிருந்து எவரும் வெளியேறாதவாறு அங்கு நிற்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

# திடீர் ஊரடங்கு அறிவிப்பால் மக்கள் சாப்பாட்டுக்கு அவதி

திடீரென ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் பொது மக்கள் சாப்பாடு இன்றி அவதிப்பட்டுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மஹரகமவில் பௌத்த பிக்குகள் உட்பட பலர் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இது தொடர்பில் சமூக ஊடகங்களிலும் காணொலிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை முழுவதும் ஊரடங்குச் சட்டம் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைமுறைக்கு வந்து இன்று காலை நீக்கப்பட்டது.

குறுகிய நேரத்தில் பொது மக்கள் தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு முண்டியடித்தனர். எனினும் அன்றாடம் உழைத்து உண்ணும் மக்களுக்கு இது பெரும் சுமையாக மாறியிருக்கிறது.

உடனடியாக அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாமல் பலர் தவித்தமையைக் காண முடிந்தது. அதுமாத்திரமன்றி குறுகிய நேரத்தில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்கும் வந்ததால் மக்கள் வீடுகளிலேயே முடங்க வேண்டிய நிலைக்குள்ளானார்கள்.

இந்தநிலையில், பல குடும்பங்கள் உணவின்றித் தவிக்கின்றன எனத் தெரியவந்துள்ளது. அத்துடன், வீதியோரங்களில் இருப்பவர்களும் யாசகம் பெற்று வாழ்பவர்களும் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகிறது.

# யாழ். மாநகர சபை உறுப்பினரால் 40 குடும்பங்களுக்கு அரிக்கன் லாம்பு!

## மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் உதவியில்

யாழ்ப்பாணம், ஏப்.04

நாட்டில் நிலவும் மின்சாரத் தடை நேரத்திலும் ஒளியைத் தேடும் நோக்கில் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் ந.லோகதயாளனால் அரிக்கன் லாம்பு வழங்கி வைக்கப்பட்டது.

18-03-2022. அன்று கனடா மார்க்கம் பகுதியில் இறைபதம் அடைந்த அமரர் கிருஸ்ணகுமார் கிருஸ்ணரட்ணம் நினைவாக, அவரது பள்ளித் தோழர்களான தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி( 1985) பழைய மாணவர்களால் இந்த உதவி வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது 40 குடும்பங்களுக்கு அரிக்கன் லாம்பு வழங்கப்பட்டதோடு வீதிகளின் வெளிச்சத்துக்காகவும் 10 விளக்குகள் வழங்கிவைக்கப்பட்டன.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.04.2022இல் வெளியிடப்பெற்றது.